வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 02.04.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 93 பக்கங்கள் : 12

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை மூட அல்லது தரம் குறைக்க சதிமுயற்சி

## பாராளுமன்றில் சிறீதரன் எம். பி.

கொழும்பு, ஏப்ரல் 02

**கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 30 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது. இதனை மூடுவதற்கு அல்லது தரம் குறைப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைக்கான மக்கள் போராட்டம் 7ஆவது நாளாக இன்றும் (நேற்றும்) தொடர்கின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தின் உப அலுவலகமொன்றாக தரம் குறைப்பதற்கான சட்டவிரோத சூழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டும், கல்முனை வடக்கு பிரதேச 11

## மாதவனை போராட்டம் 200 நாட்கள்

மட்டக்களப்பு,ஏப். 02

மயிலத்தமடு - மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் நேற்றுடன் 200 நாட்களை நிறைவு செய்தது.

மட்டக்களப்பு - மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரையில் 11

## பாலுறவுக்கு அனுமதிக்கும் வயது தொடர்பான சட்டமூலம் வாபஸ்!

கொழும்பு, ஏப். 02

பாலுறவுக்கு அனுமதிக்கும் பெண்ணின் வயதை 14 ஆகக் குறைக்கும் வகையிலான உத்தேச சட்டமூலம் மீளப்பெறப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடந்த அமர்வில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இந்தத் தகவலை தெரிவித்தார்.

1995ஆம் ஆண்டு தண்டனை சட்டக் கோவையில் 364ஆவது பிரிவில் 16 வயதுக்குட்பட்ட பெண் தனது சொந்த விருப்பத்தின் பேரில் பாலுறவு கொண்டாலும் அது கற்பழிப்பாகக் கருதப்படும் 11

## ஒருவரின் கையை வெட்டி எடுத்துச் சென்ற கும்பல்!

### வடமராட்சியில் கொடூரம்

வடமராட்சி, ஏப். 02

இளைஞர் ஒருவரின் கையை வெட்டியதுடன், அதனை மீண்டும் பொருத்திவிடாது தடுக்கும் நோக்கில் துண்டான கையையும் வாள்வெட்டுக் கும்பல் எடுத்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் வடமராட்சி - புலோலி - வட்டுவனை பகுதியில் 11

## யாழில் மட்டி எடுக்கச் சென்ற இளைஞர் கடலில் மூழ்கி பலி!

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ்ப்பாணத்தில் மட்டி எடுப்பதற்காக கடலுக்கு சென்ற இளைஞன் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, பெரியகல்லாறு ஓடக்கரையைச் சேர்ந்த 19 வயதான ரவீந்திரன் யதுசன் என்பவரே உயிரிழந்தார்.

கொழும்புத்துறை கடற்பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டி எடுப்பதற்கு கடலுக்கு சென்றவர் காணாமல்போன நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மைத்திரிக்கு தகவல் சொன்ன மர்மநபரை தேடுகிறது சி. ஐ. டி.

கொழும்பு, ஏப். 02

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர் யாரென்ற தகவலை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரிவித்த நபரை கண்டறிவதற்கான விசாரணைகளை சி. ஐ. டி. ஆரம்பித்துள்ளது.

வெளிநாட்டு தூதரகம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே இந்தத் தகவல் தமக்குத் தெரிய வந்ததாக மைத்திரிபால சிறிசேன சி. ஐ. டிக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாராம்.

இதையடுத்து, அந்த நிகழ்வு நடந்த இடத்தின் சி. சி. ரீ. வி. பதிவுகளை சி. ஐ. டியினர் பெற்று சோதித்து வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர் யார் 11



## கச்சதீவை மீட்பதற்கு நடவடிக்கை!

கோவை, ஏப். 02

கச்சதீவை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசும் வெளியுறவுத்துறை அமைச்சும் ஆராய்ந்து வருகின்றன. பிரதமர் மோடி சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார் - என்று இந்தியாவை 11

## மாணவி வித்தியா படுகொலை; மூன்றாவது குற்றவாளி மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 02

மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர் கண்டி தேசிய மருத்துவமனையில் நேற்று உயிரிழந்தார்.

கண்டி - பல்லேகலை - தும்பர சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புங்குடுதீவைச் சேர்ந்த பூபாலசிங்கம் தவக்குமார் (செந்தில் - வயது 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கண்டி தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

**பின்னணி**

புங்குடுதீவில் கடந்த 2015 மே 13ஆம் திகதி பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டார். இந்த வழக்கில் 7 பேர் குற்றவாளிகளாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் அடையாளம் காணப்பட்டனர். இந்த வழக்கில், 3ஆவது குற்றவாளியான 11

## 3,000 ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனங்கள்

### கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, ஏப். 02

9 மாகாணங்களிலும் நீடிக்கும் 13 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களுக்கும் விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று பாராளுமன்றில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சை நடத்தி, பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆசிரியர் வகையின் அடிப்படையிலுமே ஆரம்பகட்டமாக 11

## வவுனியா சிறையில் மறியலில் வைக்கப்பட்டிருந்தவர் மரணம்!

வவுனியா, ஏப். 02

வவுனியா சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவர் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் உடல்நிலை பாதிக்கப்பட்டதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் தெரிவித்ததையடுத்து, வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தார். டொான் சமில் திலான் என்ற 34 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கு தொடர்பில் வவுனியா நீதவான் நீதிமன்றில் நடந்த வழக்கில் கடந்த 26ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

ஈஸ்டர் தாக்குதல்

## “விசாரணைகளை முன்னெடுக்க நீதிக் கட்டமைப்புக்கு முடியாது!”

கொழும்பு, ஏப். 02



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க நீதிக் கட்டமைப்புக்கு முடியாது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தால் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் நானும் பாதிக்கப்பட்டுள்ளேன். ஆகையால் நீதியை கோருகிறேன் - இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ 11

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் யார் யாரெல்லாம் போட்டியிடுவார்கள் என்பது இன்னமும் தெரியவில்லை என்றாலும் இன்றைய நிலையில் மூவர் போட்டியிட இருக்கின்றனரென அறிவித்து அதற்கான பணிகளை தொடக்கிவிட்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார போட்டியிடுவது மறுபேச்சுக்கு இடமின்றி நிரூபணமாகிவிட்டது.

சஜித் பிரேமதாஸ தான் போட்டியிடுவது பற்றி அறிவித்து விட்டபோதிலும் அவரையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஓரணியில் கொண்டுவர சில வெளி சக்திகளும் சஜித்தின் கட்சியிலுள்ள சில மூத்த தலைவர்களும் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர். இன்றைய நிலையில், ரணில் விக்கிரமசிங்க வைவிட அதிக மக்கள் செல் வாக்கை தானே கொண்டிருக் கிறார் எனவும் எதற்காகத் தான் விட்டுக் கொடுக்கவேண்டும் என்றும் சஜித் வாதிட்டு வருகிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஆனால், இன்றைய நிலைமை மிகவிரைவில் மாறலாம் என்று எதிர்பார்த்திருக்கும் ஜனாதிபதி ரணிலோ, சஜித்தை தன்னோடு சேர்ப்பதைவிட அவரின் கட் சியை இரண்டாக்கி அங்கிருக்கும் முக்கிய தலைகளை "தூக்குவதிலேயே" குறியாக இருக்கிறார். சஜித்தை பலவீனப்படுத்தினால் அவர் வேறுவழியின்றி வருவார் என்பது ரணிலின் கணக்காக இருக்கலாம்.

ரணிலின் கணக்குப் பிழைத்து மூவரும் போட்டியிடுகின்ற நிலை வந்தால், தான் வெற்றி பெறுவதற்கு சாதகமான நிலை இருக்காது என்று ரணில் கணக்குப்போடுவாரெனில் அவர் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகுவார் என்று அவரை நன்கு அறிந்தவர்கள் இப்போதும் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

அப்படியொருநிலை வந்தால், தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பலமான ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டிய நிலை வரலாம் என்று இப்போதும் சிலர் நம்பிக்கொண்டிருககின்றனர். அவ்வாறு நம்புபவர்களில் முக்கியமானவர்களில் பாட்டாலி சம்பிக்க ரணவக்க ஒருவர். அதனால்தான் அவர் இப்போதும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கேட்டால் பொதுவேட்பாளராகக் களம் இறங்கத் தான் தயாராக இருக்கிறேன் என்று கூறிக்கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில், கட்சியின் செல்வாக்கு முக்கிய இடத்தை வகிப்பதற்குப் பதிலாக, வேட்பாளரின் தனிப்பட்ட ஆளுமையும் முக்கிய பங்கை வகிக்கும் என்பதால், "ரணிலா? சஜித்தா? அநுராவா? இந்த நாடு இன்று இருக்கும் நிலையில் நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லக் கூடியவர்" என்று ஒரு வாக்காளன் தனக்குள் கேள்வி கேட்டால் அதில் யார் முதலிடத்தில் இருப்பார் என்பது ஆராய்ச்சிக்குரியதல்ல. அதனால்தான் மூன்று வேட்பாளர்கள் களத்தில் நின்றாலும் அந்தக் கேள்விக்கு விடை கிடைக்கின்றபோது மற்றைய இருவரிலும் பார்க்க ஒரு வாக்கென்றாலும் தான் அதிகமாக எடுப்பேன் என்று ரணில் நம்புகிறார் என்று தெரிகின்றது.

ஆனால், அப்படியொரு 'றிஸ்க்'கை எடுக்க சிலர் விரும்பவில்லை என்று தெரிகின்றது.

அதாவது அநுரகுமார ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதில் அக்கறையுள்ள வெளிநாட்டு சக்திகள் மாத்திரமன்றி, உள்நாட்டிலுள்ள 'கோர்ப்ரேற்' சமூகமும் விரும்பவில்லை என்று தெரிகின்றது.

ரணில் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகினால், சஜித்தா? அநுரகுமாரவா? என்ற கேள்வி வாக்காளர் மத்தியில் ஏற்பட்டால் அதில், அநுரவே முன்னுக்கு நிற்பார் என்பதால் அப்படியொரு நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் பலரும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனராம்.

இந்தச் செய்தியைப் பகிர்ந்து கொண்ட தெற்கு ஊடகர் சிரித்துக் கொண்டே சொன்னார், "அப்படியொரு போட்டி வந்து அதில் அநுர வெற்றிபெற்றால், சஜித்தின் அரசியல் அதனோடு முடிந்துவிடும். ஆனால்- அநுர பதவிக்கு வந்தால் அடுத்த சில மாதங்களிலேயே கோட்டா ஆட்சியில் இருந்தபோது ஏற்பட்டதுபோன்ற ஒரு நிலைமை மீண்டும் ஏற்படலாம் என்றும் அப்படி ஏற்படுகின்றபோது தேர்தல் இல்லாமலே தான் ஜனாதிபதியாகலாம் என்றும் ரணில் கணக்குப் போட்டாலும் ஆச்சரியப்பட இல்லை" என்றார்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பொதுஜன பெரமுன இல்லாதபோதிலும் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பார்கள் என்றே நம்பப்படுகின்றது. ஆனாலும் அவர்கள் பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ரணில் நிராகரித்துவிட்டதால் தமது அடுத்த அரசியல் நகர்வை நோக்கி நகரத் தொடங்கியிருக்கின்றனர். கட்சியில் இதுவரை பஸில் ராஜபக்ஷ வகித்துவந்த தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அவர்களும் கட்சிக்கு புதிய 'இரத்தம் பாய்ச்சத்' தொடங்கியிருக்கின்றனர்.

கடந்த வாரம் நாமல் தனது பலத்தை வெளிக்காட்ட தனது சொந்த நகரமான தங்காலையில் கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்றை பிரமாண்டமாக நடத்திக் காட்டியிருக்கிறார். சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனராம். அவர்கள் எவ்வாறு வந்து சேர்ந்தனர் என்பதற்கு அப்பால், அத்தகைய கூட்டத்தை கூட்டக்கூடிய பலத்தோடு தாங்கள் இப்போதும் இருக்கிறோம் என்பதை சொல்லியிருக்கின்றனர்.

**- ஊர்க்குருவி.**









நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது...!

# சீனாவின் பெரிய வெங்காயம் நேற்று முதல் விற்பனைக்கு!

கொழும்பு, ஏப். 02

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் புறக்கோட்டை மொத்த வியாபார சந்தையில் நேற்று முதல் விற்பனையாகின்றது.

ஒரு கிலோ சீன வெங்காயத்தின் மொத்த விலை 320 ரூபாய் என்று கூறப்படுகின்றது. இந்தியாவும் பாகிஸ்தானும் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்ததையடுத்து இலங்கையில் இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்தே இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் சீனாவிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்துள்ளனர்.

நேற்று முதல் சீனாவின் பெரிய வெங்காயம் புறக்கோட்டை சந்தையில் மொத்த விற்பனைக்காக விலைக்கு வந்தது.

இதனால், பண்டிகைக் காலங்களில் வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும், நுகர்வோர் தங்களுக்குத் தேவையான வெங்காயத்தை தட்டுப்படின்றி பெற்றுக் கொள்ளலாம் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ)

# மண்மூடை கட்டப்பட்ட நிலையில் கடலிலிருந்து சடலம் மீட்கப்பட்டது

திருகோணமலை, ஏப். 01

மண்மூடை வயிற்றில் கட்டப்பட்ட நிலையிலும் கை, கால்கள் பிணைக்கப்பட்ட நிலையிலும் சடலம் ஒன்று கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - மூதூர் - பஹ்ரியா நகர் கலப்பு கடற்கரையில் நேற்று முற்பகல் இந்த சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 39 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான அப்துல் ஹமீது நப்ரீஸ் என்பவராவார்.

இது கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## இயர்போன் அணிந்து சென்ற மாணவன் ரயில் மோதி பலி!

கண்டி, ஏப். 02

காதில் "இயர்போன்" அணிந்தபடி ரயில் பாதையில் நடந்து சென்ற பல்கலைக்கழக மாணவன் ரயில் மோதி உயிரிழந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் சட்டக் கற்கைகள் பிரிவின் மூன்றாம் வருட மாணவ சித்சரதா சில்வா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இயர்போன் கேட்கும் கருவியை காதில் அணிந்து கொண்டு ரயில் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தபோதே நாவலப்பிட்டி - கண்டி ரயிலால் மோதப்பட்டு இந்த மாணவர் உயிரிழந்தார் என்று பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## இலங்கைக்கு சுற்றுலா வந்த இருவர் மரணம்!

கொழும்பு, ஏப். 02

இலங்கைக்கு சுற்றுலா பயணம் வந்த பிரித்தானியா, இந்தியா நாட்டவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

டெரிக் சார்ள்ஸ் என்ற 66 வயதான பிரித்தானிய பிரஜை மற்றும் 31 வயதான அபின் ஜோசப் என்ற இந்திய பிரஜை ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

பிரித்தானிய பிரஜை கொழும்பு 3இல் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். நித்திரையில் இருந்தபோதே அவர் உயிரிழந்தார்.

இதேபோன்று, கொழும்பு -3இல் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இந்திய பிரஜை தங்கியிருந்தார். அவர் குளியலறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக் காக மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.04.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கச்சதீவு அரசியல்

இந்திய பாராளுமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. ஆளும் பாரதிய ஜனதா கட்சி உச்சபட்சமான தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து தேர்தல் பிரசாரங்களை தீவிரப்படுத்தியிருக்கின்றது. இதே போன்று மறுபுறம், ‘இந்தியா’ கூட்டணி பாரதிய ஜனதாவை தோற்கடிக்கும் இலக்குக்காகத் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது. ஒப்பீட்டடிப்படையில் கடந்த முறை இடம்பெற்ற தேர்தலை விடவும் இம்முறை பாரதிய ஜனதா கட்சி சவாலை எதிர்கொண்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஏனெனில், இம்முறை பாரதிய ஜனதா பெருமெடுப்பில் தனிக்கட்சியாக வெற்றிபெறுமாக இருந்தால் அடுத்து வரவுள்ள இரண்டு தேர்தல்களுக்கு எதிரணியினரால் மேலுக்கு வரவே முடியாமல் போகலாம்.

இவ்வாறானதொரு நிலையில் இரண்டு அணிகளும் கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. பாரதிய ஜனதா கட்சி எதிரணிகள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருப்பதாக இந்தியா கூட்டணி குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் நாடு தேர்தல் களம் முன்னர் எப்போதுமில்லாதவாறு தீவிரமடைந்திருக்கின்றது. தேர்தல் பிரசாரங்களின்போது, இம்முறை கச்சதீவு பிரதான பேசுபொருளாக மாறியிருக்கின்றது. தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கையின்மீதும் மத்திய அரசாங்கத்தின்மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துவருகின்ற நிலையில் கச்சதீவு விவகாரம் பாரதிய ஜனதா கட்சியால் தேசியவாத நிகழ்ச்சிநிரலாக மாற்றப்பட்டிருக்கின்றது.

கச்சதீவை இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியே இலங்கையிடம் பறிகொடுத்ததாக அண்மையில் இந்திய பிரதமர் மோடி தமிழ்நாட்டில் வைத்து தெரிவித்திருந்தார். தற்போது, அதே கருத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார். காங்கிரஸ் கட்சியே இரு நாடுகளுக்கான எல்லை நிர்ணயத்தின்போது கச்சதீவை எந்தப் பக்கம் வைப்பது என்னும் தீர்மானத்தின்போது இலங்கையின் பக்கமாக வைத்தது என்று ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார்.

கச்சதீவை மீளவும் எடுக்க வேண்டும் என்னும் கோரிக்கை தமிழ்நாட்டு அரசாங்கங்களால் காலத்துக்குக்காலம் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு ஒரு காரணமுண்டு. இந்திரா காந்தி இந்த உடன்பாட்டை செய்தபோது, தமிழ்நாட்டு அரசாங்கத்தோடு – ஆகக்குறைந்தது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியுடன்கூட கலந்துரையாடியிருக்கவில்லை. அவர்களின் சம்மதம் இன்றியே இந்த உன்பாடு செய்யப்பட்டது. இதன் காரணமாகவே, தமிழ்நாட்டு அரசியலில் கச்சதீவு தொடர்ந்தும் சர்ச்சைக்குரிய விடயமாக நோக்கப்படுகின்றது. கருணாநிதி மற்றும் ஜெயலலிதா ஆகிய இரு முதலமைச்சர்களுமே கச்சதீவை மீளவும் எடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை கோரி வந்திருக்கின்றனர். ஜெயலலிதா, இது தொடர்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்திருந்தார். இது தொடர்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய அரசு சார்பில் முன்னிலையான வழக்கறிஞர், “அது இரு நாட்டு உடன்பாடுகளின் அடிப்படையில் இந்தியாவால் வழங்கப்பட்ட விடயம். அதனை இனிப் பெற முடியாது – இதனையும் மீறிப் பெற வேண்டுமானால் யுத்தம்தான் செய்ய வேண்டும்”, என்று உச்சநீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழ்நாட்டில் காலூன்றும் முயற்சிகளை தீவிரப்படுத்தியிருக்கும், பாரதிய ஜனதா கட்சி கச்சதீவை காங்கிரஸுக்கு எதிரான வலுவான துருப்புச்சீட்டாகப் பயன்படுத்த முற்படுகின்றது. ஒரு விடயம் காலம் கடந்தும் எவ்வாறு உள்ளூர் அரசியலுக்கு பயன்பட முடியுமென்பதற்கு கச்சதீவு ஒரு நல்ல உதாரணம்.

# பாடசாலை நிகழ்வுகளில் பொலிஸ், இராணுவ தலையீட்டுக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்!

*கொழும்பு, ஏப். 02*

*பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸார், புலனாய்வாளர்கள், இராணுவத்தினரின் தலையீடுகள் மற்றும் விசாரணை செயல்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.*

*இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் திலீசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,*

*பாடசாலைகளில் நடைபெற்றுவரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிப்பு செயல்பாடுகள் தொடர்பாக - குறிப்பாக, வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் பொலிஸார் இராணுவத்தினர், அரச புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் இடம்பெற்றுவருவது தனிமனித சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும்.*

*இலங்கை அரசின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் - கலை ரீதியாகவும் - குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் - சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும் போது, அதனை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது.*

*இதற்கு கல்வி திணைக்களங்களும் துணைபோகுமானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடுகளை ஆதரிக்கும் செயல்பாடுகளாகவே இவை அமையும். அண்மையில், நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகள், இலங்கை அரசமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும்.*

*இந்த விடயங்களில் பொலிஸாரோடு இணைந்து வடமாகாண கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்பாடு எனபதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.*

*இந்த விடயம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யவுள்ளோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)*

# ஐயன்கன் குள விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டம்!

*முல்லைத்தீவு, ஏப். 02*

*ஐயன்கன் குள பிரதேத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமக்கான மேலதிக தண்டத்தை அறவீடு செய்வதை நிறுத்துமாறும் உரிய பிரதேச கமக்கார அமைப்பை புனரமைக்குமாறும் கோரி நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*முல்லைத்தீவு - வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள ஐயன்கன் குளத்தின் கீழ் கடந்த 2023 சிறு போக செய்கையின் போது விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக செய்கைக்கான தண்ட அறவீட்டை நிறுத்துமாறும் அல்லது கால அவகாசம் வழங்குமாறு கோரியுமே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை துணுக்காய் பிரதேச செயலர் இ. ரமேஷ், துணுக்காய் கம நல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.வசந்தன் ஆகியோரிடம் கையளித்தனர். (ஐ)*

# இந்த ஆண்டின் மூன்று மாதங்களில் 6 இலட்சம் சுற்றுலாவிகள் வருகை!

*கொழும்பு, ஏப். 02*

*இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் நாட்டிற்கு 6 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.*


*இதன்படி, மார்ச் மாதம் 31 ஆம் திகதி நிலவரப்படி நாட்டிற்கு 6 இலட்சத்து 8 ஆயிரத்து 475 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.*

*இந்த ஆண்டில் முதல் மூன்று மாதங்களில் ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். அத்துடன், இது இலங்கைக்கு ஒரு திருப்பு முனையாகவுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.*

*2018ஆம் ஆண்டில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அண்மித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவு சுட்டிகாட்டியுள்ளது.*

*இந்நிலையில், 2024 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 253 பேரும், பெப்ரவரி மாதத்தில் 2 இலட்தச்தது 18 ஆயிரத்து 350 பேரும், மார்ச் மாதத்தில் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 181 பேரும் வருகை தந்துள்ளனர். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 02 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 20
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 40.30
திதி : அஷ்டமி




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். தொழிலில் லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உங்களின் பலம் ‑பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வாகனத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச்செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள்.

# கச்சதீவை தாரைவார்த்தமை மன்னிக்க முடியாத துரோகம்!

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ்

சென்னை, ஏப். 02

“கச்சதீவு தாரை வார்ப்பு மன்னிக்க முடியாத துரோகம். அதை நியாயப்படுத்தும் காங்கிரஸுடன் தி. மு. க. உறவு வைத்திருப்பதன் மர்மம் என்ன?” என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்த கச்சதீவை இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசு, இலங்கைக்கு தாரை வார்த்தது மன்னிக்க முடியாத துரோகம் ஆகும். இதை ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நடத்த நிகழ்வாக கடந்து சென்று விட முடியாது. கச்சதீவு அன்று தாரை வார்க்கப்பட்டதன் விளைவுகளை இன்று வரை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டை சேர்ந்த 800இற்கும் கூடுதலான மீனவர்கள் இலங்கை படையினரால் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டமைக்கும் 6,184 மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கும் 1,175 மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டமைக்கும் கச்சதீவு தாரை வார்க்கப்பட்டது தான் காரணம். அதற்கு காரணமானவர்களை எந்தக் காலத்திலும் மன்னிக்க முடியாது - என்றுள்ளது. (ஐ)

# 1974இல் நடந்ததை மோடி இப்போது ஏன் கிளறுகிறார்?

## சிதம்பரம் இப்படி கேள்வி

சென்னை, ஏப். 02

“1974ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே நடந்த பரிமாற்றத்தை மோடி இப்பொழுது ஏன் கிளப்புகிறார்?. கச்சதீவின் பரப்பளவு 1.9 சதுர கி. மீ. அதனைத் தந்து 6 இலட்சம் இலங்கைத் தமிழர்களை மீட்டு அவர்களுக்கு சுதந்திரமும் புதுவாழ்வும் தந்தவர் இந்திரா காந்தி.” என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு தொடர்பாக திமுக - பாஜக இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டுள்ளது. கச்சதீவு தொடர்பான 1974 ஒப்பந்தம் குறித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை பெற்ற ஆர். ரி. ஐ. தகவலுக்கு பிறகு இந்த விவகாரம் மீண்டும் சர்ச்சையாகி வருகிறது. பிரதமர் மோடி இந்த விவகாரத்தில் திமுகவின் இரட்டை வேடம் அம்பலமாகி விட்டது என்று கூறி விமர்சித்தார்.

இது தொடர்பிலேயே தனது எக்ஸ் தளத்தில் சிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மோடி செய்தது என்ன?. 2000 சதுர கி.மீ இந்திய பூமியை சீனா அபகரித்திருக்கிறது. “எந்தச் சீனத் துருப்புகளும் இந்திய மண்ணில் இல்லை” என்று சொல்லி சீனாவின் ஆக்கிரமிப்பை மோடி நியாயப்படுத்தினார். மோடியின் பேச்சை சீனா உலகமெங்கும் பரப்பியது. சீனா அபகரித்துள்ள நிலம் ஒரு சிறிய தீவை விட 1000 மடங்கு பெரியது. நல்லுணர்வுடன் பரிமாற்றம் வேறு, காழ்ப்புணர்வுடன் அபகரிப்பது வேறு” என்றும் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தமிழகம் வருகிறார் பிரதமர்

சென்னை, ஏப். 02

பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 9ஆம் திகதி தமிழகம் வருகிறார்.

தமிழகத்தில் போட்டியிடும் பா. ஜ. க. வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பதற்காகவே அவர் தமிழகம் வருகிறார்.

இந்த ஆண்டில் பிரதமர் தமிழகம் வருவது 6ஆவது முறையாகும். கடந்த ஜனவரி மாதத்தில் 2 முறையும் பெப்ரவரி 27ஆம் திகதியும் கடந்த மார்ச் 4 மற்றும் 18ஆம் திகதிகளிலும் பிரதமர் மோடி தமிழகம் வந்திருந்தார்.

எதிர்வரும் 9ஆம் திகதி தமிழகம் வரும் சென்னையில் பிரசாரத்தில் ஈடுபடுவார். அத்துடன், வாகனப் பேரணயிலும் பங்கேற்பார். எனினும், பிரதமரின் வருகை உத்தியோகபூர்வமாக இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. (ஐ)

# திசை திருப்பல் வேண்டாம்; பிரதமரே பதில் கூறுங்கள்!

## முதல்வர் ஸ்டாலினின் 3 கேள்விகள்

சென்னை, ஏப். 02

கச்சதீவு விவகாரத்தை வைத்து பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்னும் பல பா. ஜஇ கவினர் தி. மு. க. - காங்கிரஸ் மீது அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் நிலையில், முதல்வர் ஸ்டாலின் பிரதமருக்கு மூன்று கேள்விகளை முன்வைத்துள்ளார். திசைதிருப்பல்கள் வேண்டாம் பதில் சொல்லுங்கள் மோடி என அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது சமூகவலைதள பக்கத்தில், “பத்தாண்டுகளாகக் கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்துவிட்டு, தேர்தலுக்காகத் திடீர் மீனவர் பாச நாடகத்தை அரங்கேற்றுபவர்களிடம் தமிழ்நாட்டு மக்கள் கேட்கும் கேள்வி மூன்றுதான்.

தமிழ்நாடு ஒரு ரூபாய் வரியாகத் தந்தால், ஒன்றிய அரசு 29 பைசா மட்டுமே திருப்பித் தருவது ஏன்?, இரண்டு இயற்கைப் பேரிடர்களை அடுத்தடுத்து எதிர்கொண்டபோதும், தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாய் கூட வெள்ள நிவாரணம் வழங்காதது ஏன்?, பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சிறப்புத் திட்டம் என ஒன்றாவது உண்டா? திசைதிருப்பல்களில் ஈடுபடாமல், இதற்கெல்லாம் விடையளியுங்கள் பிரதமர் அவர்களே...” எனப் பதிவிட்டுள்ளார். (ஐ)

# கச்சதீவை இலங்கைக்கு வழங்கியதற்கு ஆதாரம் உண்டு!

## மீண்டும் கூறுகிறார் பிரதமர்

புதுடில்லி, ஏப். 09

கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்தமைக்கு ஆதாரம் உள்ளது என பிரதமர் மோடி நேற்று திங்கட்கிழமை கூறியுள்ளார்.

கச்சதீவு விவகாரத்தில் தி. மு. க. இரட்டை வேடம் போடுவதாகவும் அவர் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தி. மு. கவும், காங்கிரஸும் காட்டிய அலட்சியத்தால் ஏழை மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தி. மு. கவும், காங்கிரஸும் இணைந்து கச்சதீவை தாரை வார்த்தமைக்கு ஆதாரம் உள்ளது. இந்த இரண்டு கட்சிகளும் தங்களின் குடும்பத்தினரை மட்டுமே சிந்திக்கிறது.

தமிழக மீனவர்களை வஞ்சிக்கிறது. மீனவர்களுக்கென எதுவும் செய்யவில்லை. மீனவர்கள் நலனை காக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீனவர்களுக்கு துரோகம் இழைத்துள்ளன - என்று கூறியுள்ளார். (ஐ)

# மியன்மாரில் இலங்கையர்களுக்கு மின்சாரம் செலுத்தி தாக்குதல்!

## மீட்பதில் இலங்கை அரசு காலதாமதம்

கொழும்பு, ஏப். 02

**மியன்மாரில் உள்ள இணையவழி குற்றச் செயல்களுடன் தொடர்புடைய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதில் அரசாங்கம் காலதாமதம் செய்து வருவதாக அங்கு சிக்கியுள்ள இலங்கை இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.**

உகாண்டா அரசாங்கம் தலையீடு செய்து அந்த முகாம்களில் இருந்த தங்களது நாட்டு பிரஜைகள் குழுவை மீட்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

மியன்மார்-தாய்லாந்து எல்லைக்கு இடையில் பயங்கரவாத குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள "சைபர் கிரிமினல் ஏரியா" எனப்படும் 3 முகாம்களில் 56 இலங்கையர்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டது.

பயங்கரவாத வலையமைப்பினால் நடத்தப்படும் குறித்த முகாம்களில், இணையம் ஊடாக மக்களை ஏமாற்றி நிதி மோசடியில் அங்கு சிக்கியுள்ள இலங்கையர்கள் ஈடுபடவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்கம் தலையீடு செய்து குறித்த 56 இலங்கையர்களில் 8 பேர் மியன்மார் பாதுகாப்பு தரப்பினரால் மீட்கப்பட்டனர்.

எனினும் அவர்கள் இதுவரை இலங்கைக்கு திரும்பவில்லை.

இந்த நிலையில் கருத்துரைத்த அங்கு சிக்கியுள்ள இலங்கையர் ஒருவர், தங்களுக்கு தொலைபேசி வசதிகள் எதுவும் இல்லை எனவும் வலுக்கட்டாயமாக தடுத்து வைத்து பணிக்கு அமர்த்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தங்களுக்கு மின்சாரம் செலுத்தி தாக்குதல் நடத்தப்படுவதாகவும் உரிய வகையில் உணவுகள் வழங்கப்படுவதில்லை எனவும் அங்கு சிக்கியுள்ள இலங்கையர் குறிப்பிட்டார். (அ)

# 21 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 02

இலங்கை கடற்பரப்பை அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 17ஆம் திகதி 21 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்பரப்பில் வைத்து 2 படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட போதிலும், மேலும் 4 குற்றச்சாட்டுகளில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் ஒரு படகிற்கான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 10 மீனவர்களுக்கு எதிராக 4 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

கடற்படையினரை தாக்கி சிறுகாயம் விளைவித்தமை, சட்டவிரோதமாக கூட்டம் கூடியமை, அரச கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நேற்று மன்றில் ஆஜரான பொலிஸார், பொதுச்சொத்துக்கு சேதம் விளைவித்தமைக்காக 378,000 ரூபா நட்டஈடு கோரி மேலதிக அறிக்கையை தாக்கல் செய்தனர்.

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த காரணத்தினால் அவர்களை பிணையில் விடுவிக்க முடியாது என உத்தரவிட்ட நீதவான், மீனவர்களை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (அ)

# ஐ.நா. பிரதிநிதிகளுடன் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கலந்துரையாடல்!

கொழும்பு, ஏப். 02

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு இடையில் நேற்று முற்பகல் ம.வி.மு. தலைமை அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தமது செயற்றிட்டங்கள் பற்றி தேசிய மக்கள் சக்திக்கு தெளிவுப்படுத்திய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதிகள், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் உக்கிரமடைந்துள்ள வறுமை உள்ளிட்ட சமூக பொருளாதார பிரச்னைகள் தொடர்பாக கவனம் செலுத்தியதுடன், அவர்களது அறிக்கையில் இதுகுறித்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

இந்தச் சந்திப்பின் போது குறித்த செயற்றிட்டத்துக்கான இலங்கை வதிவிட பிரதிநிதி அஸூசா குபோடா, கொள்கை நிபுணரான சந்திரிக்கா கருணாரத்ன, ஊடக நிபுணர் சத்துரங்க ஹபுஆரச்சி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# பண்டிகைக் காலத்தில் விசேட பாதுகாப்பு திட்டம்

கொழும்பு, ஏப். 02

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இநத காலப்பகுதியில் மக்கள் தமது மற்றும் தமது பொருட்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகத்தில் கைதான 3 பேரிடம் மன்னிப்பு கோரிய பொலிஸார்!

கொழும்பு, ஏப். 02

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஹொரவப்பொத்தான பிரதேசத்தைச் சேர்ந்த மூவரிடம், ஹொரவப்பொத்தான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று உயர் நீதிமன்றில் மன்னிப்புக் கோரினர்.

6 மாதங்களுக்கும் மேலாக சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதன் மூலம் தங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து, செனுல் அப்தீன் இர்பான், செனுல் அப்தீன் கலிபத்துல்லா மற்றும் நூர்கே ஜகாரியா ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த மன்னிப்பு கோரப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், சம்பவம் தொடர்பில் உரியவர்களிடம் மீண்டும் விசாரணை நடத்த மாட்டோம் என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த மனுக்கள் துரைராஜா, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த அப்போதைய ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரொஷான் சஞ்சீவ, பொலிஸ் சார்ஜன்ட் பிரேமரத்ன, சார்ஜன்ட் சிசிர, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜயதிலக மற்றும் ஹெபிட்டிகொல்லாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் திறந்த நீதிமன்றில் ஆஜராகி மன்னிப்பு கோரினர்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன், இந்த மனுதாரர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஹொரவப்பொத்தான நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அந்த வழக்குகளில் இருந்து 2022ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பின்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின்படி, மனுதாரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களின் கணக்கில் நூறு கோடி ரூபாய்க்கு மேல் பணம் கைமாறியுள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எவ்வாறாயினும், அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் தம்மை விடுவிப்பதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதை சுட்டிக்காட்டிய மனுதாரர்கள், தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்குமாறு கோரி இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். (அ)

# மியன்மாரில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை

கொழும்பு, ஏப். 02

"மியன்மாரில் சைபர் குற்றவலயத்தில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என எதிர்க்கட்சி கோரிக்கை முன்வைத்துள்ளது.

அரசாங்கம் இந்த விடயத்தில் அசமந்தப்போக்குடன் செயல்படுவதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்-

50இற்கு மேற்பட்ட இலங்கைய இளைஞர்கள் வேலை வாய்ப்புக்கு சென்று மியன்மா




ரில் சைபர் குற்றவலயத்தில் பலவந்தமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் இடம்பெற்று சுமார் 4 மாத காலம் கடந்துள்ளது. இலங்கையர்கள் அங்கு எதிர்கொண்டுள்ள இன்னல்கள் தொடர்பில் நாளாந்தம் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இணைய குற்றச்செயல்களுக்கு அவர்கள் அங்கு பலந்தமாக உள்வாங்கப்பட்டுள்ளனர். எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் தலையீடு செய்து அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஏனென்றால் இந்த விடயத்தில் அரசாங்கம் அசமந்தப்போக்குவடன் செயற்படுவதாகவே தெரிகிறது-என்றார். (அ)

# சந்தேக நபர் தப்பியோட்டம்; 2 பொலிஸார் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப். 02

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு பூஜாபிட்டிய பொலிஸ் நிலையத்தில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

பூஜாபிட்டிய, படகல்ல பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி 3,000 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பூஜாபிட்டிய பொலிஸ் குழுவினால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபரை தடுத்து வைத்திருந்த கூண்டில் தண்ணீர் வசதி இல்லாததால், அவர் குளிப்பதற்காகப் அழைத்துச் செல்லுமாறு பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு அறிவித்துள்ள நிலையில் சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (அ)

# ஜனாதிபதி வேட்பாளர் யார்? தமிழ்க் கட்சிகள் கூடி முடிவு

## குருசுவாமி சுரேந்திரன் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 02

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதா அல்லது தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதா என்பது தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் செயற்படுகின்ற தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து பேசி முடிவெடுக்கப்படும் என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அரசியல் அமைப்பின் பிரகாரம் இவ்வருடம் பழைய முறையிலோ அல்லது புதிய முறையிலோ தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

இவ்வாறான நிலையில் தென்னிலங்கையில் போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதா அல்லது தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்ந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதா என்பது தொடர்பில் பல்வேறு தரப்பினர்களும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த சிலர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களிடம் வாக்குகள் வழங்குமாறு கோருவது என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கோருவதால் தென்னிலங்கையில் செயல்படுகின்ற இனவாத சக்திகளுக்கு சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்கு சாதகமாக அமைந்துவிடும் என சில தமிழ்த் தரப்பினர் கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

இவ்வாறு இரு பக்கவாதங்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் செயற்படுகின்ற தமிழ் கட்சிகள் மக்களின் எதிர்கால அரசியல் நலன் கருதி முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் இருக்கின்ற நிலையில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சக தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுப்போம்-என்றார். (அ)

# குற்றச்செயல்களுடன் தொடர்பு; தேரர் உட்பட ஆறு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஏப். 02

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் தேரர் உட்பட 6 பேர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் காலி பகுதியிலுள்ள விஹாரையில் வசிக்கும் 43 வயதுடைய தேரர் ஒருவர், பலபிட்டிய பகுதியை சேர்ந்த 49 வயதுடைய ஒருவர், மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவர், கம்பஹா பகுதியை சேர்ந்த 31 வயதுடைய ஒருவர், இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவர், சபுகஸ்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கைதான சந்தேக நபர்களுக்கு ஆதரவாக இருந்த மேலும் மூன்று சந்தேக நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீடு நிர்மாணப் பணியின்போது மண்மேடு சரிந்ததில் ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 02

பூஜாபிட்டிய கஹவத்த பிரதேசத்தில் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் வெட்டி தூண்களை அமைத்துக் கொண்டிருந்த இருவர் மீது மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூஜாபிட்டிய திவானவத்த பகுதியைச் சேர்ந்த ஜகத் விஜேசூரிய என்ற 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

பிரதேசவாசிகள் இருவரையும் மீட்டு அக்குறணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதிலும் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆபத்தான நிலையில் இருந்த மற்றைய நபர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (அ)

# பாடசாலை மாணவி துஷ்பிரயோகம் பெண் பொலிஸிடம் சிக்கினார் நபர்!

கொழும்பு, ஏப். 02

பேஸ்புக் மூலம் தொடர்பு கொண்டு பாடசாலை மாணவி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த 29 வயதுடைய இளைஞர் ஒருவரை, பெண் பொலிஸ் ஒருவருடன் போலி காதல் உறவை ஏற்படுத்தி கைது செய்யப்பட்ட சம்பவம் நேற்று திங்கட்கிழமை பதிவாகியுள்ளது.

பண்டாரவளை கினிகம பிரதேசத்தை சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவருடன் முகநூல் ஊடாக நட்பை ஏற்படுத்தி அவரை கொழும்பில் உள்ள தங்குமிட விடுதி ஒன்றிற்கு அழைத்துச் சென்று சில நாட்களாக துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குறித்த மாணவியின் பெற்றோரிடமிருந்து பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபரின் தொலைபேசி இலக்கத்தை கண்டுபிடித்து, அந்த எண்ணுக்கு பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரால் தொடர்பை ஏற்படுத்தி காதல் ஆசை தூண்டுவது போல் நடித்து சந்தேக நபருடன் உறவை வளர்த்துள்ளனர்.

சுமார் இரண்டு வாரங்களாக இவ்வாறு பேசியுள்ளதுடன், பெண் பொலிஸ் அதிகாரியால் தனக்கு வேலையொன்றை தேடித் தருமாறு கூறவைத்ததையடுத்து குறித்த சந்தேக நபர், வெலிமடை பிரதேசத்தில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்கு வருவதாகவும், அப்போது பண்டாரவளையில் சந்தித்து, கொழும்புக்கு செல்வோம் எனவும் கூறியுள்ளார்.

ஆனால் பின்னர் அந்த இடத்தை மாற்றி பலாங்கொடை பஸ் நிலையத்திற்கு வருமாறு பெண் பொலிஸ் அதிகாரியிடம் கூறியுள்ளார்.

அதற்கமைய இரண்டு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு, சந்தேக நபரை பலாங்கொடையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுக்கொண்டிருந்த பேருந்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வசந்தகால கொண்டாட்டம் நுவரெலியாவில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 02

ஒவ்வொரு வருடமும் நுவரெலியாவில் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் வசந்த கால நிகழ்வுகள் 2024ஆம் ஆண்டுக்கானது நேற்றுக் காலை நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக மிகவும் கோலாகாலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வழக்கம் போல் நுவரெலியா நகரில் உள்ள பாடசாலை மாணவர்களின் பேன்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடன் இந்த வசந்த கால நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நுவரெலியா மாநகர சபை ஏற்பாட்டில் நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமான தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இம் மாதம் முழுவதும் பல்வேறு பாரம்பரிய நிகழ்வுகள் போட்டிகள் என்பன ஏற்பாடாகியுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகே பிரதம அதிதியாக கலந்து



கொண்டதோடு, நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலகொட, பிரதேச செயலாளர், உதவி செயலாளர், பொலிஸ் அத்தியட்சகர்கள், முன்னாள் மாநகர சபை முதல்வர் மஹிந்த தொடபேகம மற்றும் சந்தணலால் கருணாரத்ன நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், விமானப்படை அதிகாரிகள், சுகாதார மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

நேற்று ஆரம்பித்த நிகழ்வுகள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை வசந்தகால கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து வரும் நாட்களில் மலர் கண்காட்சி, பட்டம் கோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரி வாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடைதாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் என களியாட்ட விழாக்களும் இந்த வசந்த கால விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி விசாரணைக்குழுவில் ஆஜராக மைத்திரிக்கு உத்தரவு

கொழும்பு, ஏப். 02

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, ஜனாதிபதி விசாரணைக்குழுவில் முன்னிலையாகி உரிய ஆதாரங்களுடன் தகவல்களை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று விசாரணைக் குழு முன் ஆஜராகி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அவர் அளித்த வாக்குமூலம் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிக்குமாறும் அந்த எழுத்துமூல அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2023 செப்ரெம்பரில் ஒளிபரப்பப்பட்ட சனல் 4 திரைப்படத்தின் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி வெளிப்படுத்திய தகவல்களின் விசாரணை உட்பட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஐ.எம்.இமாம் தலைமையிலான விசாரணைக்குழுவே இந்த அழைப்பை விடுத்துள்ளது. (அ)

# 15 பேருடன் சென்று கொண்டிருந்த ஜீப் 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து 10 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 02

ஜீப் வண்டியொன்று பண்டாரவளையில் இருந்து ரம்புக்கனை நோக்கி பயணித்தபோது கம்பளை தெல்பிடிய பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி சுமார் 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஜீப் வண்டியில் 15 பேர் பயணித்ததோடு,10 பேர் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை பிரதேசத்தில் இடம்பெற்ற மரண வீட்டில் கலந்து கொண்டு திரும்பிய குழுவினர் பயணித்த ஜீப் வண்டியே நேற்று அதிகாலை 4 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளானது. (அ)

# காசாவுக்கு 10 இலட்சம் டொலர் இலங்கை அரசாங்கம் அன்பளிப்பு

கொழும்பு, ஏப். 02


**காசாவில் இடம்பெறும் மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசாங்கம் 10 இலட்சம் டொலர்களை நன்கொடையாக அளித்தது.**

**ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ முகவர் நிறுவனத்தின் ஊடாக பலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கும் இந்த நிகழ்வு ஜனாதிபதியின் பணிமனையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடந்தது.**

இதற்கான காசோலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹேர் ஹம்தல்லாஹ் ஸைதிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்த்தன மற்றும் இலங்கைக்கான பலஸ்தீன தூதரக சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

காசாவில் மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையில் ஆரம்பிக்கப்பட்ட நிதியத்துக்கு பலர் நிதியுதவிகளை அளித்திருந்தனர். இதன் முதல் கட்டமாக 10 இலட்சம் டொலர்கள் பலஸ்தீன அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.




மேலும், இந்த நிதியத்துக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பங்களிக்க முடியும். பங்களிக்க விரும்புவோர் தமது நன்கொடைகளை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் 7040016 எனும் கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட முடியும். அதற்கான பற்றுச் சீட்டை 077-9730396 எனும் எண்ணுக்கு வட்ஸ்அப் ஊடாக அனுப்புமாறு ஜனாதிபதி பணிமனை கோரியுள்ளது. (ஐ)

## சு.கவின் மஹிந்த, துமிந்த, லசந்த ஆகியோர் பதவி நீக்கப்பட்டமைக்கு இடைக்கால தடை!

கொழும்பு, ஏப். 02

சுதந்திரக் கட்சியின் செயல் குழு பதவிகளில் இருந்து துமிந்த திசாநாயக்க, லசந்த அழகிய வண்ண மற்றும் மஹிந்த அமர வீர ஆகியோரை நீக்குவதற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

அவர்கள் நீதிமன்றில் முன்வைத்துள்ள கோரிக்கையை பரிசீலித்த பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நீக்கப்பட்ட அனைவரும் மீண்டும் பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து துமிந்த திசாநாயக்க, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் கடந்த சனிக்கிழமை நீக்கப்பட்டனர். (அ)

## ஈஸ்டர் தினத்தன்று தேவாலயம் அருகில் கத்திகளுடன் சந்தேக நபரொருவர் கைது

கொழும்பு, ஏப். 02

நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள தேவாலயத்தின் நுழைவாயிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் தினத்தன்று கூரிய கத்திகளுடன் நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்த நபர் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய கந்தசாமி வேதநாயகம் என்ற முன்னாள் விடுதலை புலி உறுப்பினர் என விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

அத்தோடு, இவரை கைது செய்த போது காற்சட்டைப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தி ஒன்றும் பயணப் பையிலிருந்த கத்தியொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட நீண்ட விசாரணைகளில் இவர் விடுதலை புலிகளின் ஆயுத பிரிவைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் என தெரிவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## "அஸ்வெசும" பயனாளிகளுக்கு புத்தாண்டுக்கு முன் கொடுப்பனவு

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஏப். 02

கேகாலை, நுவரெலியா, பதுளை மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டத்தின் கீழ் 2,500 ரூபாயை பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெற்ற பயனாளிகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களில் அஸ்வெசும பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போது, குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பெறுமளவானவர்கள் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அந்த மாவட்டங்



களுக்கான கோட்டாவை விட உயர் மட்டத்தில் காணப்பட்டமையால் இந்த நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும் இந்த மாதம் முதல் வாரத்துக்குள் இந்த சிக்கல்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படும். அதற்கமைய 2,500 ரூபாய் கொடுப்பனவு தடையின்றி வழங்கப்படும். கடந்த வாரம் இடம்பெற்ற அஸ்வெசும நலன்புரி சபைக் கூட்டத்தில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## முன்னாள் வடக்கு, கிழக்கு கல்வி பணிப்பாளர் திலகவதி காலமானார்!

வடமராட்சி, ஏப். 02

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் கல்வி பணிப்பாளராக பதவி வகித்த செல்வி திலகவதி பெரியதம்பி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

பருத்தித்துறை அத்தியடி விநாயகர் முதலியார் வீதியைச் சேர்ந்த இவர், ஒரு விவசாயப் பட்டதாரி ஆவார். அரச சேவையில் ஆசிரியராக இணைந்து கொண்ட இவர் கோட்டக் கல்வி அதிகாரி, வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளை வகித்து இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தார்.

போர் காலத்தில் போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாத வேளையில் - நெருக்கடியான கட்டத்தில் தமிழ் மாணவராகளின் கல்வி உயர்வுக்காக அர்ப்பணிப்புடன் இவர் சேவையாற்றியிருந்தார். கல்வித் திணைக்களத்தில் இரும்பு பெண்மணி என்று அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# மனநிலை சரியில்லாத மைத்திரிபால சிறிசேன

### கூறுகிறார் மஹிந்த அமரவீர

கொழும்பு, ஏப். 02

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைக்கால நடத்தைகள் அவரது மனநிலை சரியாக இல்லை என்பதையே புலப்படுத்துகிறது. முறையான காரணிகள் எவையும் முன்வைக்கப்படாமலேயே நாம் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றோம். எம்மை ஒருபோதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து பிரிக்க முடியாது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

முறையான காரணமொன்று இன்றியே எம்மைப் பதவிகளிலிருந்து நீக்கியுள்ளனர். விசேட கலந்துரையாடலொன்றுக்கு வருமாறு அழைப்பு விடுத்து, அவர் மாத்திரம் தனது கருத்துக்களை முன்வைத்து எமக்கு எவ்வித கருத்துக்களையும் முன்வைப்பதற்கு இடமளிக்காது



இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். ஆனால் சரியான குற்றச்சாட்டுக்கள் கூட எம்மீது முன்வைக்கப்படவில்லை.

கூட்டணி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். எதற்காக அந்த வழக்கு தொடரப்பட்டது என்பதை அவரும் நன்கு அறிவார். எவ்வாறிருப்பினும் இந்த நாட்களில் அவரது நடத்தைகளில் தடுமாற்றம் காணப்படுகிறது. அவரால் தெரிவிக்கப்படும் கருத்துக்களிலிருந்து, அவரது மனநிலையும் சரியாக இல்லை என்பது தெளிவாகிறது.

எவ்வாறிருப்பினும் இந்த சட்ட விரோத நடவடிக்கைக்கு எதிராக நாம் நிச்சயம் நீதிமன்றம் செல்வோம். எமக்கு இவ்வாறு அநீதி இழைக்கப்படும் என்பதை நாம் முன்னரே அறிந்திருக்கவில்லை. கட்சி உறுப்புரிமை நீக்கப்படவில்லை. பதவிகளிலிருந்து மாத்திரமே நீக்கப்பட்டிருக்கின்றோம். இதனை ஏகாதிபத்தியமாகவே நாம் பார்க்கின்றோம்.

நாம் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக் கொண்டதை இதற்கான ஒரு காரணமாகக் குறிப்பிடவில்லை. எம்மை பதவி துறக்குமாறும் குறிப்பிடவில்லை. அது தான் காரணம் எனில் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மத்திய குழு கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருக்க மாட்டார். அவர் நாம் எதற்காக பதவிகளை ஏற்றிருக்கின்றோம் என்பது தொடர்பில் தெளிவாக விளக்கமளித்துள்ளார். எனவே ஒரு பிரச்னை அல்ல-என்றார். (அ)

## அதிக சிறுத்தைப் புலிகள் செறிந்து வாழும் இடமாக வில்பத்து தேசிய பூங்கா தெரிவு!

கொழும்பு, ஏப். 02

அதிக சிறுத்தைப் புலிகள் செறிந்து வாழும் இடமாக வில்பத்து தேசிய பூங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விலங்கியல் நிபுணர் உள்ளிட்ட குழுவினர் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் விலங்கியல் நிபுணர் உள்ளிட்ட குழுவினர் நடத்திய ஆய்வில் குறித்த பூங்காவில் சுமார் 313 சிறுத்தைகள் இருப்பதாகவும், 8 சிறுத்தை புலிக்குட்டிகள் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

131,690 ஹெக்ரேயர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள வில்பத்து நாட்டின் மிகப்பெரிய தேசிய பூங்காவாகக் கருதப்படுகிறது.

வில்பத்து பூங்காவானது மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களை எல்லையாகக் கொண்ட வில்பத்து, புத்தளம் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு பூங்காவாகும். (அ)

# கிண்ணியா கரையோரத்தின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

## கிழக்கு ஆளுநருடன் தௌபீக் எம்.பி களத்தில்

திருமலை, ஏப். 02

**கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் கிண்ணியா உப்பாறு தொடக்கம் கங்கை வரையிலான கரையோரப் பகுதியில் கரையோர நடைபாதை அமைப்பதற்கும் அதனுடன் இணைந்து அப்பிரதேச சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

இது தொடர்பில் ஆராய்வதற்கு கிழக்கு ஆளுநர் மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது இத்திட்டம் தொடர்பாக முழுமையாக ஆராயப்பட்டதுடன், விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, திட்டமிடல் பணிப்பாளர்



பாயிஸ், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் விமல் ராஜ், காணி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)



# உணவகங்களில் திடீர் சோதனை!

அம்பாறை, ஏப். 02

உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே. கே.எம். அர்சத் காரியப்பர் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் உணவு நிலையங்களில் திடீர்ப் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்றது.

உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப் பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகளினால் இந்த களப் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டன.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கடை உரிமையாளர்களை கொண்டே அழிக்கப்பட்டன. (அ)

# மாவடிஓடை ஆற்றில் மூழ்கிய தொழிலாளி சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, ஏப். 02

மட்டக்களப்பு - மாவடிஓடை ஆற்றில் மூழ்கிய கூலித் தொழிலாளி ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது .

ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 57 வயதுடைய முஸ்தபா முகமுது என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் எனக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பசு மாட்டுப் பண்ணையொன்றில் சுமார் 15 வருட காலமாக, கூலித்தொழிலாளியாக கடமையாற்றிய குறித்த நபர் அங்குள்ள ஆற்றில் குளிப்பதை வழக்கமாகக் கொண்டவர் எனவும் சம்பவ தினத்தன்று ஆற்றில் குளிக்கச்சென்ற போது நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

திடீர்மரண விசாரணையதிகாரி எம்.எஸ். எம். நஸிர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார் .

இவருக்கு அடிக்கடி வலிப்பு நோய் ஏற்படுவதாக இவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர் விநியோகம் துண்டிப்பு



கிண்ணியா, ஏப். 02

கந்தளாய் பிரதான நீர் குழாயில் ஏற்பட்டுள்ள உடைவின் காரணமாக அதன் திருத்து வேலைகளுக்காக குழாயின் நீர் விநியோகம் துண்டிக்கப்பட உள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை இரண்டாம் திகதி குழாய் நீர் விநியோகம் முற்றாகத் தடை செய்யப்பட உள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிண்ணியா கிளை அறிவித்துள்ளது.

கிண்ணியா, முள்ளிப்பத்தானை, தம்பலகாமம், சூரங்கல், கச்சக்கொடி தீவு, குறிஞ்சாக்கேணி, குட்டிக்கராய்ச்சி, ஆலங்கேணி முதலான முதலான இடங்களுக்கான குடிநீர் விநியோகமே இவ்வாறு தடை செய்யப்பட உள்ளது.

எனவே அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்வதற்காக பொதுமக்கள் நமக்கு தேவையான குடிதண்ணீரை முன்னதாகவே சேமித்துக் கொள்ளுமாறு நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# கல்லடியில் சுவாமி விவேகானந்தரின் 25அடி உயரமான சிலை திறந்துவைப்பு!

மட்டக்களப்பு, ஏப். 01

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனின் நூற்றாண்டின் தொடக்க விழாவினை சிறப்பிக்கும் முகமாக குறித்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலையை இராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்‌ஷராத்மானந்தஜீ மஹராஜ் சம்பிராய பூர்வமாக திறந்து வைத்தார்.

25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து, சுவாமி விபுலாநந்தர் மணிமண்டலத்தின் பொது விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதி



யாக ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்‌ஷராத்மானந்தஜீ மஹராஜ், அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான கே. கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துக்கொண்டனர். (அ)

# பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டம்

திருமலை, ஏப். 02

திருகோணமலை பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தினால் நேற்று காலை 9:00 மணிக்கு கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலை அபயபுர சந்திக்கு முன்னால் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி அங்கிருந்து நடைபவனியாக சென்று கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும்




அவர்கள் ஆளுநரிடம் கையளித்தனர். (அ)

# தேர்தலில் படுதோல்வியை சந்திக்கவுள்ள ரிஷி சுனக்!

## அண்மைய ஆய்வில் தகவல்

லண்டன், ஏப். 02

**பிரித்தானியாவின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி நடைபெறவுள்ள தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்திக்கும் என கூறப்படுகின்றது.**



பிரித்தானிய தேர்தல் தொடர்பில், சிவில் சமூக பிரச்சார அமைப்பான 'பெஸ்ட் ஃபார் பிரிட்டன்' நடத்திய மெகா கருத்துக் கணிப்பிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

பிரித்தானியாவில் இவ்வாண்டு இறுதியில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு? என்பது குறித்து 'பெஸ்ட் ஃபார் பிரிட்டன்' நடத்திய மெகா கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில், ஆளும் கன்சர்வேடிவ் கட்சியைவிட, 19 புள்ளிகள் முன்னிலையுடன் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 45 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது.

அதன்படி, தற்போது தேர்தல் நடத்தப்பட்டால், ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி நாடு முழுவதும் 250 எம்.பி.க்களை இழக்க நேரிடும் என கூறப்படுகின்றது.

தொழிலாளர் கட்சியான எதிர்கட்சி 468 இடங்களை பெற்று வெற்றி பெறும் என்றும் அந்த கருத்துக் கணிப்பு முடிவுகள் காட்டுகிறது.

மேலும், பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு கடுமையான பின்னடைவு ஏற்படும் என்றும் தெரியவந்துள்ளது.

மேலும் அமைச்சரவையில் உள்ள 28 பேர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு போட்டியிடுவோர்களாயின், அவர்களில் 13 பேர் மட்டுமே மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என 'பெஸ்ட் ஃபார் பிரிட்டன்' கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

(அ)

## ஆடம்பர கைக்கடிகாரம் தொடர்பில் பெரு ஜனாதிபதி வீட்டில் சோதனை!



லிமா, ஏப். 02

ஆடம்பர கைக்கடிகாரங்கள் சம்பந்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளின் ஒரு பகுதியாக, பெரு ஜனாதிபதி தீனா பொலுவார்த்தேயின் இல்லத்தில் அந்நாட்டு அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர்.

ஜனாதிபதி பொலுவார்தே, உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் ஆடம்பர ரோலக்ஸ் கைக்கடிகாரம் அணிந்திருந்தமை தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இக்கடிகாரங்களை அவர் எவ்வாறு, எப்போது வாங்கினார் என கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில், வழக்குத் தொடுநர்களின் கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் அளித்ததையடுத்து நேற்று அதிகாலை ஜனாதிபதி தீனா பொலுவார்த்தேயின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சோதனை நடத்தப்பட்டது.

பொலிஸார் உட்பட 40 அதிகாரிகள் இச்சோதனையில் பங்குபற்றினர். ஜனாதிபதி பொலுவார்த்தே அப்போது அவ்வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆடம்பர கைக்கடிகாரத்தை எப்படி தீனா பொலுவார்த்தே (வயது-61) வாங்கினார் என முன்னர் கேட்கப்பட்டபோது தான் 18 வயதிலிருந்து உழைத்ததால் அதை வாங்க முடிந்ததாக அவர் பதிலளித்திருந்தார். (அ)

## பைடனின் தேசிய பாதுகாப்புக் கல்வி சபையின் ஆலோசகராக இலங்கையர்!

நியூயோர்க், ஏப். 02

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்புக் கல்வி சபையின் ஆலோசகராக இலங்கை வம்சாவளியான கலாநிதி பெட்ரிக் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.


வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி பெட்ரிக் மெண்டிஸின் விரிவான அரசாங்க சேவை மற்றும் கல்விசார் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

14 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய பாதுகாப்புக் கல்வி சபையானது எட்டு அமைச்சரவை செயலாளர்கள் மற்றும் ஆறு புகழ்பெற்ற அமெரிக்க குடிமக்களைக் கொண்டுள்ளது.

இந்த சபைக்கு அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் தலைமை தாங்குகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் நியமனம் கலாநிதி மெண்டிஸின் தொழில் வாழ்க்கைக்கு, வெளிவிவகாரக் கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள உயர்கல்வி ஆகியவற்றில் அவர் ஏற்படுத்திய தாக்கத்திற்கு சான்றாக அமைந்துள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இலங்கையில், உள்நாட்டு போர் இடம்பெற்ற காலப்பகுதியில் கலாநிதி பெட்ரிக் மெண்டிஸ் அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்திற்கு குடிப்பெயர்ந்தார்.

மினசோட்டாவில் இருந்த காலப்பகுதியில் ஹென்னெபின் கவுண்டி அரசாங்கம், மின சோட்டா நிதித் துறை மற்றும் மினசோட்டா பிரதிநிதிகள் சபை ஆகியவற்றில் கலாநிதி மெண்டிஸ் பணியாற்றினார்.

மேலும் மாநிலத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரித்து, கலாநிதி பெட்ரிக் மெண்டிஸுக்கு மினசோட்டாவின் "கௌரவ குடிமகன்" என்ற பட்டத்தை ஆளுநர் ரூடி பெர்பிச் வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கம்போடியாவில் சட்டவிரோத வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த 250 இந்தியர்கள் மீட்பு

புதுடில்லி, ஏப். 02

கம்போடியாவுக்கு வேலை தேடிச் சென்ற 250 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் போலி வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றும் முகவர் மூலமாக கம்போடியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் அவர்கள் சட்டவிரோத சைபர் குற்றச் செயல்களில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இது குறித்து கம்போடியாவில் உள்ள இந்திய தூதரகத்துக்கும், அங்கு மாட்டிக்கொண்ட இந்தியர்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதையடுத்து, கம்போடியாவில் உள்ள இந்தியர்களுக்கு, மோசடி கும்பல் குறித்த தகவல் வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் இந்திய தூதரகம் மூலம் பலமுறை வழங்கப்பட்ட நிலையில் கடந்த 3 மாதங்களில் 75 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், அங்கு சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கம்போடிய அதிகாரிகளுடன் இணைந்து போலி முகவர்களை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் வெளியுறவுத் துறை அமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## இத்தாலியில் வீழ்ச்சியடையும் குழந்தைகளின் பிறப்பு வீதம்!

ரோம், ஏப். 02

ஐரோப்பிய நாடான இத்தாலியில் கடந்த சில ஆண்டுகளாக குழந்தைகள் பிறப்பு வீதம் குறைந்து வருவதாக அந்நாட்டின் தேசிய புள்ளியியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த 2022ஆம் ஆண்டு அங்கு குழந்தை பிறப்பு விகிதம் 6.7 ஆக இருந்தது எனவும், ஆனால் 2023இல் இது 6.4 சதவீதமாக சரிந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் கடந்தாண்டு 379,000 குழந்தைகள் பிறந்துள்ளதுடன் இது முந்தைய ஆண்டைவிட சுமார் 14 ஆயிரம் குறைவாக உள்ளதாகவும் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் கடந்த ஜனவரி 1ஆம் திகதி நிலவரப்படி நாட்டில் 5.80 கோடி மக்கள் வசித்து வருகின்றனர் எனவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7000 பேர் குறைவாக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து இத்தாலிக்கு குடியேறுபவர்களின் எண்ணிக்கை 3.2 சதவீதம் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## விபசார பெண்களுக்கு இனி கசையடி, மரண தண்டனை!

காபூல், ஏப். 02

ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்துவரும் தலிபான்கள், இனி தங்கள் நாட்டில் திருமணத்தை மீறிய உறவில் ஈடுபடும் பெண்களுக்கு கசையடி கொடுத்தல், கல் எறிந்து கொல்லுதல் போன்ற தண்டனைகள் நிறைவேற்றவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த 2021-ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இதன்போது அவர்கள், இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின்படியே ஆட்சி நடைபெறும் என்று அறிவித்தனர். தவிரவும், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது என்றும் பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும், என்றும் உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்றும் உறுதியளித்திருந்தனர்.

ஆனால், தலிபான்களின் ஆட்சி அவ்வாறாக நடைபெறவில்லை, இதன் விளைவாக அங்கு தற்போதும் வறுமையும், பசியும், நோயும் மட்டுமே மிஞ்சியுள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் அரசு தொலைக்காட்சி நேர்காணலொன்றில் கலந்துகொண்ட தலிபான் முல்லா ஹிபத்துல்லா அகுந்ஸ்தா வெளியிட்ட அறிவிப்பில், பெண்களுக்கு பொது இடத்தில் வைத்து கசையடி, கல்லடி வழங்கும் நடைமுறை மீண்டும் நடைமுறைக்கு வரும் எனக் கூறியுள்ளார்.

அதில் அவர் 'சர்வதேச சமூகம் ஆப்கன் பெண்களின் உரிமைகள் பற்றி பேசி வருகின்றன, அது ஷாரியத் சட்டத்துக்கு எதிரானது. பெண்களைக் கல்லால் அடித்துக் கொன்றால் அது பெண் உரிமைக்கு எதிரானது என நீங்கள் கூறுகிறீர்கள், ஆனால், விரைவில் நாங்கள் அதை நடைமுறைப்படுத்தப் போகிறோம்.

திருமணத்தை மீறிய உறவில் ஈடுபடும் பெண்களை நாங்கள் கல்லால் அடித்தும், கசையடி கொடுத்தும் கொல்லும் நடைமுறையைக் கொண்டு வரப் போகிறோம், பொதுமக்கள் முன்னிலையில் இந்தத் தண்டனை நிறைவேற்றப்படும்.

(அ)

# அரசுக்கு எதிராக நாட்டில் போராட்டம் நடத்துவோம்!

## சஜித் பிரேமதாச எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 02

**அரசாங்கம் பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக, தண்டனை சட்டக் கோவையில் முன்வைத்துள்ள திருத்தங்களை மீளப்பெறாவிட்டால் நாட்டில் பாரிய போராட்டகளை முன்னெடுக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரிக்கை விடுத்தார்.**

நேற்று முன் தினம் பதுளையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பெண்கள் பாலியல் உறவில் ஈடுபடுவதற்கான வயதெல்லையை 16 இலிருந்து 14ஆகக் குறைப்பதற்கு, தண்டனை சட்டக் கோவையில் அரசாங்கம் திருத்தங்களை முன்வைத்துள்ளது. இவ்வாரம் பாராளுமன்ற அமர்வின்போது இந்த திருத்தத்தை அரசாங்கம் மீளப்பெறாவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டங்களை நாம் முன்னெடுப்போம்.

அரசியலமைப்பில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தெளிவாக உறுதிப்படுத்தப்படவில்லை.

தொழிற்துறையில் பெண்களின் பங்களிப்பு 33 சதவீதமாகவே உள்ளது. அரசாங்கம் செய்ய முனைகின்ற மிக முட்டாள் தனமான செயல் ஒன்று தொடர்பில் தற்போது வெளிப்படுத்தவுள்ளேன். அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ள தண்டனை சட்டக் கோவை திருத்தத்தில், குற்றங்களை தடுப்பதற்கன்றி அவற்றை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றன.

பாலியல் உறவுகள் தொடர்பான விருப்பத்தை வெளிப்படுத்தும் வயதை, 16 இலிருந்து 14ஆகக் குறைப்பதற்கான திருத்தத்தை முன்வைத்துள்ளது. அந்த வகையில் 14 வயதுடைய சிறுமிகளுக்கு இதற்கான விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்.

இன்று நாடளாவிய ரீதியில் பாலியல் துஷ்பிரயோகம், துன்புறுத்தல், சீண்டல்கள் வானளவு உயர்வடைந்துள்ளன.

இவற்றுக்கு அரசாங்கம் வழங்கும் பதில் யாதெனில், பாலியல் உறவில் ஈடுபடுவதற்கான வயதெல்லையைக் குறைப்பதாகும்.

பாலியல் துஷ்பிரயோகங்களை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளதாக என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அது மாத்திரமல்ல. 22 வயதுக்குட்பட்ட ஆணொருவர் ஏதேனும் பாலியல் துன்புறுத்தல் அல்லது துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால், அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை இந்த தண்டனை சட்டக் கோவை திருத்தத்தின் ஊடாக தளர்த்தப்பட்டுள்ளது.

இது சரியா என்று நான் கேட்கின்றேன்? பெண்கள் துஷ்பிரயோகத்தைப் போன்றே ஆண்கள் துஷ்பிரயோகத்துக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும் அதற்காக வெவ்வேறாக உறுப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# நான்கு வருடங்களின் பின்னர் 'தாய்எயார்வேஸ்' இலங்கைக்கு!

கொழும்பு, ஏப். 02

நான்கு வருடங்களின் பின்னர் தாய் எயார்வேஸ் விமானம் ரி.ஜி 307 கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இந்த விமானம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 11.55 மணியளவில் விமான நிலையத்தை வந்தடைந்தது. இதில் தாய்லாந்து பிரஜைகள் உட்பட 150 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்தனர்.

இந்த விமானம் நேற்று முன் தினம் காலை 7.05 மணியளவில் தாய்லாந்து திரும்பியதாகவும், தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகள் தினமும் இடம்பெறு வதாகவும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# முட்டை விலை குறைக்கப்படுமாயின் கேக்கின் விலையை குறைக்க முடியும்

## வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, ஏப். 02

முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக குறைக்கப்படுமாயின், ஒரு கிலோகிராம் கேக்கின் விலையை 100 ரூபாவினால் குறைக்க முடியும் என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பண்டிகைக் காலத்தில் உள்ளூர் முட்டை ஒன்றை 35 ரூபாவுக்கும் குறைவாக விற்பனை செய்ய முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பண்டிகைக் காலங்களில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை சந்தைக்கு தட்டுப்பாடு இன்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதனால் நுகர்வோருக்கு அவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக குறைக்கப்பட்டால் மாத்திரமே கேக் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க முடியும் என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்துள்ளார். (அ)

# மன்னார் ஈச்சளவக்கை கிராமத்தில் கசிப்பு உற்பத்தி செய்த இருவர் கைது!

மன்னார், ஏப். 02

மன்னார் மாவட்டத்தின் ஈச்சளவக்கை கிராமத்திலுள்ள காட்டுப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று முன் தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காயநகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஈச்சளவக்கை கிராமத்தின் காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

ஈச்சளவக்கை கிராமத்தின் மருதம் விளையாட்டுக் கழகம் அதிரடியான முடிவை எடுத்து கழகத்தின் ஆறு பேர் மற்றும் ஊடகவியலாளர் ஒருவருவரும் இணைந்து நேற்று முன் தினம் மாலை தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியாளர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். கசிப்பு பரல் இரவாகியும் அவ்விடத்தில் இருந்த நிலையில் குறித்த குழுவினரால் மீட்கப்பட்ட கசிப்பு அடம்பன் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இருவர் அடம்பன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். (அ)

# பெண்ணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 02

தங்கொட்டுவ - கட்டுகெந்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

தங்கொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய கட்டுகெந்த என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்த மேலதிக விசாரணைகளை தங்கொட்டுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கிட்டும்

## கூறுகின்றார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஏப். 02

இன்னும் சில மாதங்களில் உதயமாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பாதிக்கப்பட்டோருக்கு நிச்சயம் நீதி வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆங்கிலப் பத்திரையொன்று பிரசுரித்த கட்டுரையொன்று சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் குறித்த கட்டுரையானது இலங்கை-இந்தியாவுக்கிடையிலான இராஜதந்திர உறவில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அது தொடர்பில் பிரபல ஆங்கில பத்திரிகையொன்றின் அரசியல் கட்டுரையில், மைத்திரி இந்தியாவிலுள்ள பிரபல இராஜதந்திரியொருவர் தொடர்பிலேயே தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களது வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனமையே இதற்கான காரணமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் இதுவரை இந்த தாக்குதல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு என்னவானது?

இதன் மூலம் யாருக்கு வெள்ளையடிப்பு செய்வதற்கு முயற்சிக்கப்படுகின்றது? புதிதாக வெளிவரும் இந்த அரசியல் சூழ்ச்சி என்ன?

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இவ்வாறானதொரு செய்தி வெளியிடப்பட்டுள்ளமையை, இரு நாடுகளுக்கிடையில் முரண்பாடுகளை தோற்விக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

இதுவரைக் காலமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, 100 மில்லியன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான செய்தி வெளியாகியுள்ளது. எவ்வாறிருப்பினும் இன்னும் சில மாதங்களில் உதயமாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பாதிக்கப்பட்டோருக்கு நிச்சயம் நீதி வழங்கப்படும்-என்றார். (அ)

# பார்வைக் குறைபாடால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 02

நாட்டில் பார்வைக் குறைபாடால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் பெரும்பாலான குழந்தைகள் மூக்குக் கண்ணாடி அணிவதை வழக்கமாக வைத்துள்ளதோடு, தற்போது லென்ஸ் பயன்பாடும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அதிக நேரம் வீட்டுக்குள்ளேயே செலவிடுவதும், தொழில்நுட்பத்துக்கு அடிமையாகி இருப்பதும் இன்று அதிகமான குழந்தைகள் கிட்டப் பார்வை கொண்டவர்களாக இருக்க முக்கிய காரணமாக அமைந்திருப்பதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் பார்வை கோளாறுகள் அனைத்து விடயங்களிலும் சவாலாக மாறும் எனவும் வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பாலுறவுக்கு...

என்றுள்ளது. இந்த தண்டனை சட்டக் கோவையில் பெண்ணின் வயது எல்லையை 14ஆகக் குறைக்க நீதி அமைச்சர் முன்மொழிந்திருந்தார்.

நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்துக்கு அரசியல் மற்றும் சிவில் தரப்பு மத்தியில் கடும் எதிர்ப்புகள் எழுந்தன. அத்துடன், இந்த சட்டமூலத்தை மீளப்பெறுமாறு பல்வேறு தரப்பினர் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். இந்த சட்டமூலத்தை மீளப்பெற வேண்டும் என்று பெண் பாராளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தினர்.

இந்த நிலையிலேயே, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பித்த தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தை மீளப்பெற்றுக்கொண்டதாக அறிவித்துள்ளார். (ஐ)

## மைத்திரிக்கு...

என்பது எனக்கு தெரியும். தனது உயிர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தால் நீதிமன்றில் இரகசியமாக சாட்சியம் அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று அண்மையில் கண்டியில் வைத்து கூறியிருந்தார். இது தொடர்பில், சி. ஐ. டியினர் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விசாரணைகளை...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அவர்,

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் பேசப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் நீதியமைச்சர் பதவியில் இருந்துகொண்டு " ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பில் ஒருசில இலங்கையர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். நாட்டில் இரத்த வெள்ளம் ஓடும் செயல்பாடுகளில் ஈடுபட இவர்கள் எத்தனித்துள்ளார்கள். ஆகவே, இவ்விடயம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் " என்று குறிப்பிட்டேன்.

அடிப்படைவாத செயல்பாடுகள் தொடர்பில் நான் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக எமது அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர் உட்பட உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தார்கள். விஜேயதாஸ ராஜபக்ஷ பொய்காரர், இனவாதி, என்று என்னை கடுமையாக விமர்சித்தார்கள். இதையடுத்து, அமைச்சு பதவியில் இருந்து நான் நீக்கப்பட்டேன்.

நான் குறிப்பிட்டதை போன்றே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த சம்பவத்துக்கு பின்னர் அப்போதைய அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர் "அலரி மாளிகையில் ஊடக சந்திப்பை நடத்தி, "நடந்தது நடந்து விட்டது, நாங்கள் என்ன செய்வது", என்று குறிப்பிட்டார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நான் சாட்சியமளித்தேன். ஆணைக்குழுவுக்கு குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் எனக்கு எதிராக இரு தரப்பில் இருந்து நட்டஈடு கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்யுமாறு நான் சவால் விடுத்தேன். ஆனால், இதுவரை எவரும் எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் நானும் பாதிக்கப்பட்டுள்ளேன். இந்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபருக்கோ, நீதியமைச்சுக்கோ, நீதிமன்றத்துக்கோ விசாரணைகளை முன்னெடுக்க முடியாது. பொலிஸ் உட்பட விசாரணை தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தால் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்யும் அதனை தொடர்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் - என்றார். (ஐ)

## மாதவனை...

தமிழர்கள் கால்நடை பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் பகுதியை பெரும்பான்மை இனத்தவர்கள் அடாத்தாக பிடித்துள்ளனர். அவர்கள், அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகளை வெட்டியும் சுட்டும் கொன்றதுடன் பண்ணையாளர்களையும் தாக்கி வருகின்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் கால்நடை பண்ணையாளர்கள் சித்தாண்டி மகா வித்தியாலயம் முன்பாக தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டம் நேற்றுடன் 200 நாட்களை எட்டியது. இதை யொட்டி அவர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதில், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## 3,000...

2 ஆயிரத்து 400 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பரீட்சையில் சித்தியடைந்த ஏனையவர்கள் தொடர்பில் இந்த நாட்களில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஏப்ரல் விடுமுறைக்கு பின்னர் அவர்களுக்கும் நியமனம் வழங்க முடியும் என நம்புகிறேன்.

அதேநேரம் விஞ்ஞானம். கணிதம். தொழிநுட்பம், ஆங்கில பாடங்களுக்கு 2 ஆயிரத்து 700 பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்காக பரீட்சை நடத்தி முடித்திருக்கிறோம். இந்த வாரத்துக்குள் அவர்களுக்கு அதன் பெறுபேறுகளை வெளியிடவுள்ளோம். அவர்களுக்கு கல்வி அமைச்சின் கீழ் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

இதற்கு மேலதிகமாக நீதிமன்ற உத்தரவு தற்போது நீக்கப்பட்டுள்ளதால 13ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு 9 மாகாணங்களிலும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கம் விரைவாக அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ஐ)

## கல்முனை...

செயலகத்தை உப அலுவலகமொன் றாக கருதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் உடனடியாக இரத்துச் செய்யப்படவேண்டும், கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் தனது அதிகாரங்களை கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குள் சட்டவிரோதமாக பிரயோகித்து வருவது நிறுத்தப்படவேண்டும்.

1993 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி கல்முனை வடக்கு பிரதேச செயலகத் தின் சுயாதீன தொழிற்பாடு உறுப்படுத்த வேண்டும், கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைகளை வர்த்தமானிப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவிவரும் பிரச்னைக்கு அரசியலுக்கு அப்பால் சென்று நிரந்தரத்தீர்வு வழங்கப்பட வேண்டும். தமிழர்களுடைய பிரதேசம் என்பதாலும் சுயமான சுதேசிய தமிழ் மொழியை பேசக்கூடியவர்கள் என்பதால் தான் அந்தப் பிரதேசத்தை பறிக்க முற்படுகிறார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது.

பாண்டிருப்பு , கல்முனை மற்றும் பெரியநிலாவனை உள்ளிட்ட பல பிரதேசங்கள் தனித்துவமாக இயங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் உள்ள நிலையில் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இயங்க விடாமல் தடுப்பது மனித உரிமை மீறல் செயல்பாடு - என்றார்.

அத்துடன், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்காக மக்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு தமது ஆதரவையும் இதன்போது அவர் பாராளுமன்றத்தில் பதிவு செய்தார். (ஐ)

# ஞானசார தேரருக்கான தண்டனையால் தேவையற்ற பிரச்னைகள் தோன்றலாம்

## அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்கிறார் இராஜாங்க அமைச்சர் அனுப



கொழும்பு, ஏப். 02

ஞானசார தேரருக்கு கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை பௌத்தர்களுக்கு மனவேதனையளிக்குமாக இருந்தால் அது இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி நாட்டில் தேவையில்லாத பிரச்னைகளை தோற்றுவிக்கும். ஆகவே, அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஆதரவாக நான் பேசவில்லை. இருப்பினும் உண்மையை மற்றும் யதார்த்தம் பற்றி அவதானம் செலுத்த வேண்டும்.

கூரகல விகாரை விவகாரத்தை தொடர்புப்படுத்தி ஞானசார தேரர் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்குக்கு அமையவே ஞானசார தேரருக்கு நான்காண்டு கால கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கூரகல விகாரை 2,000 ஆண்டுகால பழமை வாய்ந்தது. இந்த விகாரையை அண்மித்த பகுதியில் இருந்த பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை முஸ்லிம் அடிப்படைவாதிகள் அசிற் திரவம் ஊற்றி அழித்து, அடையாளங்களை சிதைத்து கட்டடங்களை அமைத்துள்ளார்கள். இதற்கு எதிராகவே ஞானசார தேரர் குரல் கொடுத்தார்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் போது பௌத்தர்களின் மனம் வேதனையடையாதா? கூரகல விகாரையின் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்பட்டுள்ளதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி ஞானசார தேரரே ஆரம்பத்தில் குறிப்பிட்டார். ஆனால், அதனை எவரும் கவனத்தில் கொள்ளவில்லை. விளைவு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தை தோற்றுவித்தது.

சுதேச முஸ்லிம்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி ஞானசார தேரர் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையாகியுள்ளன. பௌத்த அடிப்படைவாதம், இந்து அடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

ஞானசார தேரருக்கு கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை பௌத்தர்களுக்கு மனவேதனையளிக்குமாக இருந்தால் அது இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி நாட்டில் தேவையில்லாத பிரச்னைகளை ஏற்படுத்தும் ஆகவே அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கடந்த கால சம்பவங்களை மறந்து அனைவரும் விட்டுக் கொடுப்புடன் செயற்படும் தேவை தற்போது காணப்படுகிறது என்பதை அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

# கஞ்சா கடத்திய கலால் திணைக்கள அதிகாரிகள் உட்பட 8 பேர் கைது!

கொழும்பு, ஏப். 02

நீர்கொழும்பு மற்றும் சிலாபம் பகுதிகளில் கேரள கஞ்சாவுடன் நான்கு கலால் அதிகாரிகள் உட்பட 8 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

45 கிலோ கேரள கஞ்சாவுடன் 8 பேர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட அதிகாரிகள் பயணித்த கலால் திணைக்களத்துக்கு சொந்தமான வான் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## மாணவி...

- தற்போது உயிரிழந்த பூபாலசிங்கம் தவக்குமார் உட்பட நால்வருக்கு மரண தண்டனையும் 30 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒருவரின்...

இடம்பெற்றுள்ளது. இதில் செல்வநாயகம் செந்தூரன் (வயது -30) என்பவரே கையை இழந்தவராவார்.

வாள்வெட்டுக்கு இலக்கான நபர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இளைஞரின் வீட்டுக்கு அண்மையாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முன்விரோதமே சம்பவத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## கச்சதீவை...

ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் இந்த மாதம் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் கோவை பாராளுமன்றத் தொகுதியில் அண்ணாமலை போட்டியிடுகிறார். நேற்று அங்கு தேர்தல் பணிமனை ஒன்றை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைக்கு கச்சதீவு வழங்கப்பட்ட விவகாரத்தில் தி. மு. க. அரசுக்கும் முக்கிய பங்கு உள்ளது என்று குற்றஞ்சாட்டிய அவர், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக பெற்ற ஆவணங்களையும் அவர் இதன்போது வெளிப்படுத்தினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து தீர்க்கமான முடிவு ஜூலையில்!

கொழும்பு, ஏப். 02

ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதிக்கும் இடையில் நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன் தீர்க்கமான அறிவிப்பு எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் அல்லது ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தற்போதைய தேர்தல் சட்டமே தேர்தல் நடைமுறையை நிர்வகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு 2024ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

வாக்காளர் பதிவுப் பணி தற்போது நடைபெற்று வரும் நிலையில், ஜூலை மாதத்துக்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான மதிப்பிடப்பட்ட செலவு 10 பில்லியன் ரூபாயாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு!

கொழும்பு, ஏப். 02

ஏப்ரல் மாதத்துக்கான லிட்ரோ எரிவாயுவின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதன்படி 12.5 கிலோ எரிவாயுவின் விலை 135 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 4,115 ரூபாவாகும்.

5 கிலோ எரிவாயுவின் விலை 55 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,652 ரூபாவாகும்.

அத்தோடு 2.3 கிலோ எரிவாயுவின் விலை .23 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 772 ரூபாவாகும்.

இந்த விலை குறைப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்தது-என்றார். (அ)

# வட மாகாண சுகாதார பணிப்பாளராக மீண்டும் பெரும்பான்மை இனத்தவர்!

## பிராந்திய சுகாதார சேவைகளுக்கும் புதிதாக பணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 02

**வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மருத்துவர் வி.பி.எஸ்.டி.பத்திரண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.**

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி செயற்பட்டுவரும் நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் பி.கே.விக்கிரமசிங்கவும், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் சுபாஸ்கரனும், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் வினோதனும், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் உமாசங்கரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்துவர் ஜி.சுகுணனும், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்துவர் எம்.எச்.எம்.அசாத்தும், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்துவர் பி.எஸ்.என்.விமலரட்ணவும், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்துவர் வீரக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக முன்னர் கடைமையாற்றி இடமாற்றப்பட்ட மருத்துவர் திலீப் லியனகே அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நியமனம் வழங்கப்பட்டவர்கள் விரைவில் கடமைகளை பொறுப்பேற்பர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஆலயத்தில் தேங்காய் உடைத்துவிட்டு வீடு திரும்பிய முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 02

ஆலயத்தில் தேங்காய் உடைத்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த முதியவர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி அர்ஜீனன் என்ற 68 வயதானவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயமொன்றுக்கு சென்று வழிபட்ட பின்னர் தேங்காய் உடைத்துவிட்டு வீடு திரும்பிய முதியவர் இயலாத நிலையில் வரம்பொன்றில் அமர்ந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்தில் இருந்து சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தரைவழிப் பாலத்தின் நிர்மாணப்பணி; இலங்கை - இந்தியா இடையே இணக்கம்

கொழும்பு, ஏப். 02

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தரைவழிப் பாலத்தை நிர்மாணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை சார்பில் பிரதிநிதிகள் குழுவொன்றை நியமிக்குமாறு இந்தியா, இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் தற்போது அதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா தலைமையிலான குழுவினருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையிலான குழுவினருக்கும் இடையில் கடந்த 27 ஆம், 28ஆம் திகதிகளில் புதுடில்லியில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது.

இதன்போதே மேற்கண்டவாறு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த தரைவழிப் பாலம் தொடர்பாக தமிழர் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. ரெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இந்திய- இலங்கை மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு கண்ட பின்னரே இந்த பாலத்தை அமைக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார். (அ)

# ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸவை களமிறங்குமாறு கோரும் சு.க. செயல்குழு!

கொழும்பு, ஏப். 02

நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவை, சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குமாறு அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் ஏகமனதாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களின் கூட்டம் கொழும்பு டார்லி வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இது தொடர்பில் மேலும் கலந்துரையாடி உரிய தீர்மானம் எடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். (அ)

# விமல் வீரவன்ஸ விடுதலை!

கொழும்பு, ஏப். 02

கடவுச்சீட்டு வழக்கில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ விடுவிக்கப்பட்டுள்ளார் நீர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே, அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, குடிவரவுச் சட்டத்தை மீறிச் செயலற்ற கடவுச்சீட்டுடன், வெளிநாடு செல்ல முயற்சித்ததாகக் கூறி கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய, உக்ரைன் இராணுவங்களில் இலங்கையர் இணையவேண்டாம்!

## பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஏப். 02

சட்டவிரோதமான முறையில் ரஷ்ய மற்றும் உக்ரைன் படைகளுடன் இணைய வேண்டாம் என அனைத்து ஆயுதப் படை உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் ரஷ்ய மற்றும் உக்ரைன் படைகளுடன் இந்நாட்டின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் இணையவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்கு இது தொடர்பில் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய மற்றும் உக்ரைன் இராணுவத்திற்கு சேவையாற்றுவதற்கு இலங்கை இராணுவத்தினரை அனுப்புவதற்கு இலங்கை இராணுவத்துக்கும் ரஷ்ய இராணுவத்துக்கும் இடையில் எவ்வித உடன்பாடும் ஏற்படாத பின்னணியில் இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சென்னை அணியை வீழ்த்தியது டில்லி!



விசாகப்பட்டினம், ஏப். 02

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 20 ஓட்டங்களில் வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி. இந்தப் போட்டியின் கடைசி கட்டத்தில் துடுப்பெடுத்தாடிய டோனி 16 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்ததார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 13ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் விளையாடின.

இதில் நாணயச் சுழற்சியில வென்று முதலில் துடுப் பெடுத்தாடிய டில்லி அணி 191 ஓட்டங்கள் குவித்தது.

விசாகப்பட்டினத்தில் நடந்த இந்தப் போட்டியில் டில்லி அணிக்காக டேவிட் வோர்ணர் மற்றும் பிரித்வி ஷா இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர்.

இருவரும் அதிரடி தொடக்கம் அளித்தனர். சென்னையின் பந்துவீச்சை துவம்சம் செய்து முதல் விக்கெட்டுக்கு 93 ஓட்டங்கள் குவித்தனர். வோர்ணர் 35 பந்துகளில் 52 ஓட்டங்கள் குவித்தார். முஸ்தபிஹூர் ரஹ்மான் வீசிய 10ஆவது ஓவரில் ஸ்விட்ச் ஹிட் ஆடி ஆட்டமிழந்தார். வோர்ணர் அடித்த பந்தை அபாரமா கப் பிடியெடுத்து ஆட்டமிழக்க செய்தார் பத்திரண.

தொடர்ந்து அணித் தலைவர் ரிஷப் பந்த் துடுப் பெடுத்தாடினார். 27 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்த பிரித்வி ஷா ஆட்டமிழந்தார். பின்னர் மிற்செல் மார்ஷ் களத்துக்கு வந்தார். 15ஆவது ஓவரில் மார்ஷ் மற்றும் ஸ்டப்ஸ் விக்கெட்டை பத்திரண கைப்பற்றி இருந்தார். இருவரையும் யோர்க்கர் வீசி போல்ட் செய்தார்.

இருந்தும் பந்த் மறுமுனையில் ஓட்டங்களை குவித் தார். 32 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்து அவர் கவனம் ஈர்த்தார். 18 மற்றும் 19ஆவது ஓவரில் முறையே 14 மற்றும் 17 ஓட்டங்கள் எடுத்தது டில்லி. அதற்கு பந்த் ஆடிய அதிரடி ஆட்டம் காரணம். 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 191 ஓட்டங்கள் எடுத்தது டில்லி அணி.

பவர்பிளே ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 62 ஓட்டங்கள் குவித்திருந்தது டில்லி. பத்திரண 3 விக்கெட்கள் வீழ்த்தினார். ஜடேஜா மற்றும் முஸ்தபிசுர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். துஷார் தேஷ்பாண்டே, 4 ஓவர்கள் வீசி 24 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்தார்.

192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி விரட்டியது. அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் ரச்சின் ரவீந்திரா இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். பவர்பிளே ஓவர்களில் டில்லி அணியின் பந்து வீச்சாளர்கள் நெருக்கடி கொடுத்தனர். ருதுராஜ் ஓர் ஓட்டத்திலும் ரச்சின் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதில் 12 பந்துகளை எதிர்கொண்டிருந்தார் ரச்சின். அவர்கள் இருவரின் விக்கெட்டையும் கலீல் அகமது கைப்பற்றினார்.

தொடர்ந்து ரஹானே மற்றும் மிற்செல் இணைந்து நிதானமாக ஆடினர். இருவரும் 3ஆவது விக்கெட்டுக்கு 68 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். மிட்செல் 34 ஓட்டங்களிலும், ரஹானே 45 ஓட்டங்க ளும் எடுத்தனர். சமீர் ரிஸ்வி ஓட்டம் ஏதும் எடுக்காமல் முதல் பந்தில் விக்கெட்டை இழந்தார். துபே, 18 ஓட்டங்களில் வெளியேறினார்.

தொடர்ந்து டோனி களத்துக்கு வந்தார். இந்தத் தொடரில் முதன்முறையாக அவர் துடுப்பெடுத்தாடிய மையால் மைதானத்தில் போட்டியை பார்த்த பார்வை யாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அவர் எதிர் கொண்ட முதல் பந்தை பௌண்ட்ரிக்கு விரட்டினார்.

சென்னை அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 41 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரில் 20 ஓட்டங்கள் மட்டுமே சென்னை அணி எடுத்தது. டோனி, 16 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்தார். 4 பௌண்ட்ரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் இதில் அடங்கும். ஜடேஜா 21 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. இதன் மூலம் 20 ஓட் டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது டில்லி. (ஐ)

## டோனி புதிய சாதனை

விசாகப்பட்டினம், ஏப். 05

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக 5 கிண் ணங்களை வென்றுள்ள மகேந்திர சிங் டோனி 17 தொடர்களில் விக்கெட் காப்பாளராகவும் செயல்பட் டுள்ளார்.

இந்நிலையில், டில்லி அணிக்கு எதிரான போட்டி யில் பிரித்வி ஷா விக்கெட்டை பிடியெடுத்து அசத்தி னார் டோனி. இதன்மூலம், இருபது - 20 கிரிக்கெட்டில் ஸ்ரொம்பிங் மற்றும் பிடியெடுப்பு மூலம் விக்கெட் காப்பாளராக 300 விக்கெட்கள் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனையை டோனி படைத்துள்ளார். இதுவரை 213 பிடிகளும் 87 ஸ்ரொம்பிங்கும் செய்துள்ளார்.

இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் வீரர் கம்ரான் அக்மல் மற்றும் தினேஷ் கார்த்திக் இருவரும் 274 விக் கெட்களுடன் 2ஆவது இடத்திலும், 270 விக்கெட்டு களுடன் டி கொக் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.





## இலங்கை 531 ஓட்டங்கள் குவிப்பு வங்கம் 178 ஓட்டங்களுடன் சுருண்டது

சட்டோகிராம், ஏப். 02

பங்களாதேஷ் இலங்கை இடையிலான 2ஆவது டெஸ்ட் சட்டோகிராமில் நடந்து வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை துடுப்பெடுத்தாடியது.

இதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 531 ஓட்டங்கள் குவித்தது.

அந்த அணியின் குசால் மெண்டிஸ் 93 ஓட்டங்களும் கமிந்து மெண்டிஸ் 92 ஓட்டங்களும் கருணரத்ன 86 ஓட்டங்களும் தனஞ்சய டி சில்வா 70 ஓட்டங்களும் சந்திமால் 59 ஓட்டங்களும் நிஷான் மதுஷ்கா 57 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷின் ஷகிப் அல் ஹசன் 3 விக்கெட்களும், ஹசன் மெஹ்மூத் 2 விக்கெட்களும் கைப்பற்றினர்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய பங்களா தேஷ் அணி 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில், சகீர் ஹசன் 54, மொமினுல் ஹக் 33, தையுல் இஸ்லாம் 22 ஆகியோர் பெற்ற ஓட்டங்களே அதிக ஓட்டங்களாகும்.

இலங்கையின் பந்துவீச்சில் அசித பெர்னாண்டோ 4 விக்கெட்களையும் விஸ்வ பெர்னாண்டோ, லஹிரு குமார, பிரபாத் ஜெயசூர்யா ஆகியோர் தலா 2 விக்கெட் களையும் கைப்பற்றினர். (ஐ)



## ஹைதராபாத் அணியை வெற்றிகொண்டது குஜராத்!

அகமதாபாத், ஏப். 02

ஐ. பி. எல். நடப்பு தொடரின் 12ஆவது போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது குஜராத் ரைட்டன்ஸ் அணி.

இந்தப் போட்டியில் குஜராத் அணிக்காக சாய் சுதர்ஷன் மற்றும் டேவிட் மில்லர் இணைந்து சிறப்பான இணைப்பாட்டம் அமைத்தனர். அது அந்த அணிக்கு வெற்றியை பெற்று தந்தது. மோகித் சர்மா அபாரமாக பந்து வீசினார்.

அகமதாபாத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாண யச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

மயங்க் அகர்வால் 16 ஓட்டங்களிலும், ட்ராவிஸ் ஹெட் 19 ஓட்டங்களிலும் வெளியேறினர். அபிஷேக் சர்மா, 20 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்தார். 10 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 74 ஓட்டங்கள் எடுத்தது ஹைதராபாத்.

கிளாசன் அதிரடியாக ஆடி ஓட்டம் குவிப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. 12 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்து ரஷீத் கான் சுழலில் போல்ட் ஆனார். தொடர்ந்து மார்க்ரம் 17 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் ஷ பாஸ் அகமது மற்றும் அப்துல் சமாத் இணைந்து 45 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். குஜ ராத் அணிக்காக கடைசி ஓவரை வீசிய மோகித் சர்மா, வெறும் 3 ஓட்டங்களை மட்டுமே கொடுத்திருந்தார். அந்த ஓவரில் 2 விக்கெட்களை வீழ்த்தி இருந்தார். கடைசி பந்தில் சமாத் ரன் அவுட் ஆனார். 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது ஹைதராபாத்.

இந்தத் தொடரில் இதற்கு முன்னர் ஆடிய இரண்டு போட்டிகளிலும் 200இற்கும் அதிகமான ஓட்டங்களை ஹைதராபாத் அணி எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் அணி விரட்டியது. சாஹா மற்றும் அணித்தலை வர் கில் இணைந்து இன்னிங்ஸை தொடக்கம் கொடுத் தனர். சாஹா, 13 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கில், 28 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். அதன் பின்னர் ஹைதராபாத் அணி பவுலர்கள், குஜராத் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆட்டத்தில் நெருக்கடி கொடுத்தனர். ஆனால், அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

பொறுப்புடன் இன்னிங்ஸை அணுகினர் சாய் சுதர்ஷன் மற்றும் டேவிட் மில்லர். 3ஆவது விக்கெட் டுக்கு 64 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். மயங்க் மார்க்கண்டே வீசிய 16ஆவது ஓவரில் இருவரும் இணைந்து 24 ஓட்டங்கள் எடுத்தனர். அது ஆட்டத்தில் குஜராத் அணிக்கு திருப்புமுனையாக அமைந்தது. 36 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்த சாய் சுதர்ஷன், கம்மின்ஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

19.1 ஓவரில் இலக்கை எட்டியது குஜராத் அணி. சிக்சர் விளாசி வெற்றியை உறுதி செய்திருந்தார் மில்லர். 27 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மறுமுனையில் விஜய் சங்கர், 11 பந்துகளில் 14 ஓட் டங்கள் எடுத்திருந்தார். நடப்பு சீசனில் இது குஜராத் அணிக்கு 2ஆவது வெற்றியாக அமைந்தது. (ஐ)

## டில்லியின் ரிஷப் பந்துக்கு ரூ. 43 இலட்சம் அபராதம்!

விசாகப்பட்டினம், ஏப். 02

டில்லி கப்பிட்டல்ஸ் அணி அணித் தலைவர் ரிஷப் பந்துக்கு ஐ. பி. எல். நிர்வாகம் 12 இலட்சம் ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 43 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.



நேற்று நடந்த சென்னை அணிக்கு எதிரான போட்டி யில் குறிப்பிட்ட நேரத்துக் குள் டில்லி கப்பிட்டல்ஸ் அணி பந்து வீசவில்லை. இதற்காகவே அந்த அணியின் தலைவருக்கு அபராதம் விதிக் கப்பட்டது.

# விக்கிலீக்ஸ் - ஜூலியன் அசாஞ்சே: அரச இரகசியங்களை வெளியிட்டமை ஊடக கருத்துச் சுதந்திர மீறலா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




2012களில் உலகரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவாரா எனும் கேள்விக்கு பிரிட்டிஷ் நீதிமன்றம் கடந்த வாரம் மார்ச் 27 இல் தீர்ப்பு அளித்துள்ளது.

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இதுகுறித்து மூன்று வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டுள்ளார்.

மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களை வெளிப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. அவரின் மீதான கைதானது, அமெரிக்க அரசின் செயற்பாடு ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதலாம். ஆயினும் மேற்குலகின் அரச ரகசியங்களை காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர் கொல்லப்பட்டது உள்பட பல தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே (**Julian Assange**) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன. இவற்றில் பல விஷயங்கள் ஆட்சியாளர்களின் அத்துமீறல்களையே வெளிக்கொணர்ந்தன.

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச் சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே.

ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும்கூட அப்பாற்பட்டு அரசு எனும் அமைப்பை மோசமாகக் கையாளும் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் ஊடகர்களுக்கு என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பு உலகில் உள்ளது ?

**பாக்தாத்தில் அமெரிக்கா தாக்குதல்:**

அமெரிக்க ராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் கடந்த 2010-ம் ஆண்டு வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை வேறு முனையில் திசை திருப்பி அமெரிக்கா தொடங்கியது.




இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்கு கைது வாரன்ட்டை சுவீடன் அரசு மூலம் பிறப்பித்தது. இது அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி என ஜூலியன் அசாஞ்சே குற்றம்சாட்டினர்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்திருந்தது.

**இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச் சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே. சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, ஜூலியன் அசாஞ்சே நாடு கடத்தப்பட்டால், விசிலூதிகளுக்கு என்ன பாதுகாப்பு என்பதை அலசும் ஆக்கமாகும்.**

ஆயினும் இந்த நீண்ட கால வழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன் அசாஞ்சே ஜாமீன் விதிமுறைகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் கடந்த 2012-ம் ஆண்டு தஞ்சம் அடைந்தார். 2019-ம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. அதன்பின் ஜூலியன் அசாஞ்சேவை இங்கிலாந்து போலீசார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அதிகாரிகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.




அமெரிக்க சிறையின் கடுமையான சூழலைச் சந்திப்பது, தன்னை தற்கொலைக்கு தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்ததும் அறிந்ததே.

இந்த நிலையில், கடந்தசில மாதங்கள் முன்பாக ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்பட இருக்கிறார் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

**அவுஸ்திரேலியாவில் பிறந்தவர் :**

அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012-ல் தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச ரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முதலில் அவரை சுவீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டுவிட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல்நலம் குன்றிக் கொண்டேவருவதும் ஜனநாயகத்துக்காக இப்படிச் செயலாற்றும் விசிலூதிகளின் (**Whistle Blowers**) பாதுகாப்பு தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும் இது சுட்டிக்காட்டுகிறது.


இங்கிலாந்து உயர் பாதுகாப்பு சிறையில்:

இங்கிலாந்தில் உள்ள உயர் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அசாஞ்சே தன்னுடைய 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தின் வழி பல நாடுகளின் மோசமான அரசியலாட்டங்களை அம்பலப்படுத்தி உள்ளார். அசாஞ்சே அம்பலப்படுத்திய விவகாரங்கள் 2012 காலகட்டத்தில் உலகெங்கும் பெரும் நாயகப் (**Hero**) பிம்பத்தை அவருக்கு உருவாக்கியதும் உண்மையே.

அமெரிக்காவின் முகத்திரையை கிழித்துக் காட்டியதால், உடனடியாக சர்வதேச அழுத்ங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர், இப்போது பிரிட்டன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தன்னை அமெரிக்கா வசம் ஒப்படைத்துவிடக் கூடாது, அது தன் உயிருக்கு ஆபத்து என்று கோரி நீதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார் அசாஞ்சே.

**உலக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர் :**

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது அமெரிக்க அரசு சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை அது ஏற்றது. அசாஞ்சேவை தனிமைச் சிறையிலோ, கொலராடோவில் உள்ள சூப்பர்மேக்ஸ் சிறையிலோ அடைக்க மாட்டோம் என்று அமெரிக்க அரசு உறுதியளித்தது.




அத்துடன் வழக்கு விசாரணைக்குப் பிறகு தண்டனையை அவர் அவுஸ்திரேலிய சிறைகளில்கூட அனுபவிக்கட்டும் என்றும் அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக அமெரிக்கத் தரப்பை ஏற்றுக்கொண்டது நீதிமன்றம். அமெரிக்க அரசு இன்னமும் துரத்திவருகிறது.

**நீண்ட சட்டப் போராட்டம்:**

இந்த நீண்ட சட்டப் போராட்டம் நீடித்தால் அது அசாஞ்சேவுக்கும் ஆயுளைப் பாதிக்கும் எனும் அச்சம் இப்போது மேலும் அதிகரிக்கிறது. இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டும். முடிவடையாத நீதிமன்ற வழக்குகள் மனதளவில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன என்று அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

உண்மையை வெளிக்கொணர்ந்தற்காக எதிர்கொள்ளும் சித்திரவதையானது எவரையும் மனச்சிதைவுக்கு ஆளாக்கிவிடும். அசாஞ்சேவுக்கு ஏற்படும் எந்த ஆபத்தும் ஊடக ஜனநாயகத்துக்கான இழிவாகவே அமையும். பத்திரிகையாளராக அவரது பணியைதான் செய்தார். தனது பணியை செய்தற்காக அவர் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பது கண்கூடு.

ஊடகர்கள் நவீன சமூக முன்னேற்ற செயல்பாட்டின் முக்கியமான அங்கங்கள் ஆவர். அவர்களுடைய உயிர்ப்பான செயல்பாடு ஜனநாயகத்துக்கு முக்கியம். எவ்வாறாயினும் அசாஞ்சே சட்ட ரீதியாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே பத்திரிகையாளர்களின் அவாவாகும்.

# சீனப் பொருளாதாரத்தில் பதற்றம்: இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு சிக்கல் ஏற்படுமா?

கடந்த 1978இல் சீனா தனது பொருளாதாரத்தை தாராளமயமாக்கி சீர்திருத்தத்தை தொடங்கியதிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி ஆண்டுக்கு சராசரியாக 9 வீதமாக உள்ளது.

உலகளாவிய வளர்ச்சி இஞ்சினாக ஆகியிருந்த சீன பொருளாதாரத்தின் மீது கோவிட் 19 பெருந்தொற்று தாக்கத்தை ஏற்படுத்தியபோது அது பல தசாப்தங்களில் மிகக்குறைந்த வளர்ச்சியை பதிவு செய்தது. அதாவது 2020 இல் வளர்ச்சி விகிதம் 2.2 வீதம் ஆக இருந்தது.

இது அடுத்த ஆண்டு 8 வீதத்துக்கும் அதிகமாக உயர்ந்தது. ஆனால் 2022 இல் 3 வீதம் மட்டுமே வளர்ச்சி இருந்தது.

எனவே சீனா இப்போது குறைவான வளர்ச்சியின் நீண்ட காலகட்டத்திற்குள் நுழைந்துள்ளதா?

பொருளாதாரத்தில் என்ன தவறு இருக்கலாம் மற்றும் உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு இதன் பொருள் என்ன என்பது பற்றிய ஐந்து முக்கிய கேள்விகளுக்கான விடைகளை இங்கே கோடிட்டுக் காட்டுகிறோம்.

### 1. சீனப் பொருளாதாரத்தில் என்ன நடக்கிறது?

2023 இல் தனது பொருளாதாரம் 5.2 வீதம் வளர்ச்சியடைந்ததாக சீனா ஜனவரி மாதம் அறிவித்தது. வளர்ச்சி விகிதங்களின் அடிப்படையில் உலகின் சிறந்த பொருளாதாரங்களில் இந்தியாவிற்கு அடுத்தபடியான விகிதம் இது. சீனாவின் பொருளாதாரம் இந்தியாவை விட ஐந்து மடங்கு பெரியது.

ஆனால் நாட்டிற்குள் மக்கள் வேறுவிதமாக உணர்கிறார்கள்: ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாக 2023-ல் சீனாவிலிருந்து அந்நிய முதலீடு வெளியேற்றம் இருந்தது. இளைஞர்களின் வேலையின்மை விகிதம் கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 20 வீதத்துக்கும் அதிகமாக உயர்ந்தது. மற்றும் பங்குச் சந்தை இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஐந்தாண்டுகளில் இல்லாத அளவுக்குச் சரிந்தது.

தங்கள் நாட்டின் வீழ்ச்சி அடைந்துவரும் பொருளாதாரம் குறித்து சீன மக்கள் சிலர், சீனாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் வெய்போ சமூக தளத்தில் கடந்த ஆண்டு தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.

"நீண்ட காலமாக வேலையில்லாமல் கடனில் இருப்பதால் உதவி வேண்டும்" என்று ஒரு பயனர் குறிப்பிட்டிருந்தார். மற்றொரு பதிவு பங்குச் சந்தையில் பணத்தை இழப்பது பற்றியது. "ஷாங்காய் பங்குச்சந்தையை தகர்க்க அமெரிக்க அரசு சில ஏவுகணைகளைத் தருமா" என்று தான் யோசிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பல கருத்துக்கள் பின்னர் நீக்கப்பட்டதாக மேற்கத்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கோவிட் -19 தொற்றுநோய்க்குப் பிறகு சீனாவின் பலவீனமான மீட்சிக்கான காரணம், பல நாடுகளைப் போலல்லாமல் சீனா வளர்ச்சியைத் தூண்டுவதற்கு மிகத்தீவிரமான கொள்கைகளை பின்பற்றவில்லை" என்று டச்சு வங்கியான ஐஎன்ஜியின் கிரேட்டர் சீனாவுக்கான தலைமை பொருளாதார நிபுணர் லின் சாங் கூறுகிறார்.

அமெரிக்கா போன்ற பிற நாடுகள் கோவிட் நிவாரணத்திற்காக மீட்பு திட்டங்களை செயல்படுத்தின. அமெரிக்காவின் 1.9 டிரில்லியன் டாலர் திட்டம் வேலையில்லாதவர்களுக்கு ஆதரவையும், தொற்றுநோய் காலகட்டத்தில் சிறு வணிகங்கள், மாகாணங்கள் மற்றும் உள்ளூர் அரசுகளுக்கு கூடுதல் ஆதரவையும் வழங்கியது.

"சீனாவின் பொருளாதாரக்கொள்கை முழுவதும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக சீனாவில் பணவீக்கம் ஒரு பிரச்சனையாக இல்லை. ஆனால் பொருளாதார மீட்சி பலவீனமாக உள்ளது," என்று சாங் விளக்குகிறார்.

இன்னும் கட்டப்படாத அல்லது முடிக்கப்படாத அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பல சீனர்கள் பணம் கொடுத்துள்ளனர்

UBS முதலீட்டு வங்கியின் வாங் தாவோ, பலவீனமான மீட்சியின் பின்னணியில் உள்ள மற்றொரு முக்கிய காரணத்தை சுட்டிக்காட்டுகிறார். "சீனா அதன் வரலாற்றில் மிக மோசமான நில விலை வீழ்ச்சியின் மத்தியில் உள்ளது," என்றார் அவர்.

"சீனாவில் குடும்பங்களின் 60மூ சொத்து, வீட்டில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. நிலம் மற்றும் வீடுகளின் விலைகள் குறையும் போது மக்கள், குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர், செலவு செய்ய பயப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக பெரிய வீட்டு உபயோக பொருட்களின்





நுகர்வு கணிசமாகக் குறைந்துள்ளது என்பது தெளிவான அறிகுறியாகும்," என்று அவர் மேலும் கூறினார்.

பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு பங்களிப்பை நிலம் மற்றும் வீட்டுவசதி சந்தை அளிப்பதால், அதில் உள்ள சிக்கல்கள் பொருளாதாரத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பெரிய கட்டுமான நிறுவனங்கள் கடனாகப் பெறக்கூடிய தொகையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டு அதிகாரிகள் அறிமுகப்படுத்தியதில் இருந்து இந்தத் தொழில் பெரும் நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது.

பல ஆண்டுகளாக சீனாவின் கட்டுமானத்துறை வங்கிகளில் கடன் வாங்குவதன் மூலமும், கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலமும், இன்னும் கட்டுமானம் துவக்கப்படாத புதிய வீடுகளை விற்பதன் மூலமும் புதிய திட்டங்களுக்கு நிதி திரட்டி வந்துள்ளது.

இந்த வணிக மாதிரி பல நாடுகளில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. ஆனால் சீனாவின் டெவலப்பர்கள் அதிக லாபம் ஈட்டுகிறார்கள். அதிக பணம் கடன் வாங்குகிறார்கள்.

சமீபத்திய ஆண்டுகளில் பல பெரிய வீடு கட்டுமான டெவலப்பர்கள் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.

பல சீனர்கள் இந்த டெவலப்பர்களுக்கு இன்னும் கட்டப்படாத அல்லது பாதி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முன்பணம் செலுத்தியுள்ள நிலையில் அவர்கள் தங்கள் பணத்தை இழக்கும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். இது சிலருக்கு அவர்களின் வாழ்நாள் சேமிப்பாகும்.

உள்கட்டமைப்பை உருவாக்க கோடிக்கணக்கில் கடன் வாங்கி, வருமானம் ஈட்ட நில விற்பனையை நம்பியிருக்கும் உள்ளூர் அரசுகளும் அதிக நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

அவர்களின் கடன் 92 டிரில்லியன் யுவான் (12.6 டிரில்லியன் டாலர்கள் ) ஆக உள்ளது. 2019 இல் சீனாவின் பொருளாதார உற்பத்தியில் 62.2 வீதம் ஆக இருந்த இது 2022-ல் 76 வீதம் ஆக உயர்ந்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கிறது.

"ஆனால் சீனாவின் பொருளாதாரம் நிச்சயமாக நெருக்கடியில் இல்லை" என்கிறார் எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட்டின் மூத்த பொருளாதார நிபுணர் டியான்சென் சூ.

2010 களில் சீனாவின் வளர்ச்சியில் "முன்கூட்டிய கடன்" மூலம் விரைவான விரிவாக்கம் ஏற்பட்டது. மேலும் வீட்டு விலைகள் அதிகரித்தன. உள்கட்டமைப்பு வளர்ச்சியடைந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

யான் சென்

"சீனா அந்த மாதிரியில் இருந்து தன்னை மறுசீரமைத்துக்கொள்வதால், ஒரு திருத்தம் தவிர்க்க முடியாதது," என்று அவர் பிபிசியிடம் கூறினார்.

"ஒரு பெரிய இயந்திரம் சோர்வுடன் இயங்குவது போலவும், மேலும் அதன் பாகங்களில் சில விரிசல்கள் தோன்றத் தொடங்குவது போலவும் இது தெரிகிறது," என்றார் அவர்.

### 2. சீனாவின் பொருளாதாரம் அமெரிக்காவை விஞ்சுமா?

2010 ஆம் ஆண்டில் சீனா மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவின் அடிப்படையில், இரண்டாவது பெரிய பொருளாதாரமாக ஆனபோது, அமெரிக்காவை அது விஞ்சிவிடும் என்று கணிப்புகள் செய்யப்பட்டன. பெரும்பாலானவர்கள் அது நடப்பதற்கு சிறிது காலமே ஆகும்




என்று நினைத்தனர்.

ஏனென்றால் சீனாவில் குறிப்பிடத்தக்க பொருளாதார விரிவாக்கம் இருந்தது: 2010 வரையிலான இரண்டு தசாப்தங்களில், சீனா இரண்டு காலகட்டங்களில் இரட்டை இலக்க வருடாந்திர வளர்ச்சியைப் பதிவு செய்தது: 1992-1995 மற்றும் 2003-2007.

2028 க்குள் சீனா அமெரிக்காவை முந்திவிடும் என்று சிலர் மதிப்பிட்டனர். ஆனால் வேறு சிலர் அதற்கு 2032 ஆகும் என்று வாதிட்டனர்..

ஆனால் இப்போது பொருளாதார நிச்சயமற்ற நிலை இருக்கும் நிலையில் சீனாவால் இதை சாதிக்க முடியுமா?

"முடியும். ஆனால் அநேகமாக அடுத்த சில ஆண்டுகளுக்கு இது சாத்தியமில்லை" என்று ஹாங்காங் பல்கலைக் கழகத்தில் உள்ள "சென்டர் ஆன் காண்டெம்பரரி சைனா அண்ட் தி வேர்ல்ட்" (CCCW) வின் நிறுவன இயக்குநரும், வாஷிங்டன் டிசி யில் உள்ள புரூக்கிங்ஸ் நிறுவனத்தில் உள்ள சீன மையத்தின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் லி செங் கூறினார்.

டியான்சென் சூ இன்னும் நேரடியான பதிலை அளிக்கிறார்: 2040 களில் இது நடக்கும் என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்கா இந்த ஆண்டின் இறுதியில் அதிபர் தேர்தலின் முடிவு உட்பட பல நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்கிறது என்று பேராசிரியர் லீ குறிப்பிட்டார்.

"அமெரிக்காவிற்கு நிலைமை அவ்வளவு சுமுகமாக இல்லை. மோசமான பாகுபாடுகள், இனப் பதற்றங்கள், குடியேற்றக் கொள்கை போன்ற கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பல நிச்சயமற்ற நிலைகள் அங்கு உள்ளன."

"சீனாவைப் பொறுத்தவரை, புதிய நன்மைகள் உருவாகியுள்ளன. எடுத்துக்காட்டாக, இது சில ஆண்டுகளில் மின்சார கார் துறையில் முன்னணியில் உள்ளது. இது பலரை ஆச்சரியப்படுத்தியுள்ளது."

"ஆனால் சீனாவிற்கு மோசமான செய்தி அதன் வயதான சமூகம். ஒப்பீட்டளவில் சீனாவை விட அதிகமான பிறப்பு விகிதமும், தொழில் துறைக்கு துணைபுரியும் புலம்பெயர்ந்த மக்களையும் கொண்ட அமெரிக்கா, மிகவும் குறைவான அழுத்தத்தில் உள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் உள்ள ளுயுஐளு சீனா உலகளாவிய ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் பேராசிரியர் ஆண்ட்ரூ மெர்தா, சீனத் தலைமைக்கும் இது பற்றி சந்தேகம் இருக்கலாம் என்று கருதுகிறார்.

"பொருளாதாரம் தடம் புரளும் அபாயத்தின் அடிப்படையில் பார்த்தால் அமெரிக்காவை விஞ்ச சீனா விரும்பாமலும் இருக்கலாம்."

16 பக்கம் பார்க்க)

# சீனப் பொருளாதாரத்தில் பதற்றம்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

"மதிப்பிடப்பட்டுள்ள குறைந்த வளர்ச்சி விகிதம், வீட்டுவசதி நெருக்கடி மற்றும் விநியோகச் சங்கிலிகளின் உலகளாவிய மறுசீரமைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது சீனத் தலைமை ரிஸ்க் எடுக்கத்தயாராக இருக்காது. அமெரிக்க மேலாதிக்கத்திற்கு சவால் விடும் தைரியமான பொருளாதார முன்முயற்சிகளை எடுக்கும் வாய்ப்புகள் குறைவாக இருப்பதாகவே தோன்றுகிறது."

**3. சீனாவிற்கு என்ன விளைவுகள் ஏற்படக்கூடும்?**

எதிர்மறையான நம்பிக்கை அதிகரிப்பது, பொருளாதாரத்தை பின்னுக்கு இழுக்கிறது என்று சாங் கருதுகிறார். நம்பிக்கையின்மையானது, முதலீடு மற்றும் நுகர்வு ஆகியவற்றைக் குறைக்கிறது. இது பெருநிறுவன லாபங்



களைக் குறைக்கிறது. அது நிலம் மற்றும் வீடுகள் துறையில் குறைந்த விலைகளில் பிரதிபலிக்கிறது. பலவீனமான நம்பிக்கைக்கு இது ஊட்டமளிக்கிறது.

"இதிலிருந்து வெளிவர ஆதரவுக் கொள்கைகள் தேவை."

உள்நாட்டு அதிருப்தியை திசை திருப்ப சீன அதிபர் ஷி ஜின்பிங் தைவான் மீது படையெடுப்பார் என சிலர் அஞ்சுகின்றனர்.

சுயஅதிகாரம் கொண்ட தைவானை ஒரு பிரிந்த மாகாணமாக சீனா பார்க்கிறது. பெய்ஜிங்கின் கட்டுப்பாட்டில் அது வரவேண்டும் என்று நினைக்கிறது.

"இது முட்டாள்தனமானது. ஆனால் மக்களை ஒன்றிணைத்து வைக்க இத்தகைய பயமுறுத்தும் மிரட்டல்கள் அதிகரிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்" என்று பேராசிரியர் மெர்த்தா குறிப்பிட்டார்.

"தாய்வான் மீது போரை விரும்பும் எவரும் அதாவது சீனா, அமெரிக்கா அல்லது தாய்வானில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் இதுபற்றி கவனமாக சிந்திக்க வேண்டும். ஏனென்றால் இந்தப் போர் உக்ரேனிலிருந்து வேறுபட்டதாக இருக்கும்," என்று பேராசிரியர் லீ எச்சரிக்கிறார்.

"இது முதலாவது செயற்கை நுண்ணறிவு யுஜ போராக இருக்கலாம். இது முழுக்க முழுக்க உயர்தொழில்நுட்பம் கொண்ட இயந்திரத்துடன் இயந்திரம் மோதும் போராக இருக்கும்."

"தாய்வான் சீனாவின் முக்கிய பிரச்சனை என்பது உண்மை. ஆனால் சீனத் தலைமையும் போர் தனது கடைசி முயற்சி என்பதை அங்கீகரிக்கிறது. அதே நேரத்தில் பொருளாதார தேக்கநிலை என்பது அதற்கு போதுமான காரணம் அல்ல."

**4. மந்தநிலை உலகப் பொருளாதாரத்தின் மீது என்ன விளைவை ஏற்படுத்தும்?**

பொருட்கள், சீன சுற்றுலா மற்றும் புவிசார் அரசியல் ஆகிய மூன்று வழிகளில் இது உலகைப் பாதிக்கும் என்று டியான்சென் சூ நினைக்கிறார்.

"முதலாவதாக, பொருட்களின் முக்கிய இறக்குமதியாளராக சீனா இருப்பதால் மந்தநிலையால் அதன் தேவை குறையும். குறிப்பாக இரும்புத் தாது மற்றும் பாக்சைட் போன்ற கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களின் தேவை குறையும்.

"இரண்டாவதாக, சீன சுற்றுலாப் பயணிகள் பின்வாங்குவது முக்கிய சுற்றுலா இடங்களை பாதிக்கும். வெளிநாட்டு சுற்றுலா, தொற்றுநோய்க்கு முந்தைய உயரத்திற்கு திரும்புவதற்கு போராடும்."

"மூன்றாவதாக மந்தநிலையானது குறிப்பாக உள்நாட்டில் பொது நிதி நெருக்கடியுடன் இணைந்திருந்தால், அது உதவி மற்றும் அதிகாரபூர்வ கடன் வழங்கல் மூலம் புவிசார் அரசியலை வடிவமைக்கும் சீனாவின் திறனைத் தடுக்கும்."

கடந்த தசாப்தத்தில், பல முதலீடுகள் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மூலம் தன் உலகளாவிய இருப்பை நிலைநிறுத்துவதற்காக சீனா, பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சியை (பிஆர்ஐ) துவக்கியது. சீனா 152 நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது மற்றும் 3,000 க்கும் மேற்பட்ட திட்டங்களில் முதலீடு செய்தது.

ஆனால் டீசுஜ திட்டம் அதை "கடன் பொறியில்" சிக்க வைத்தது என்றும் டீசுஜ மூலம் பல குறைந்த அல்லது நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு கடன் வழங்கும் முதல் நாடாக சீனா ஆகியுள்ளது என்றும் சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

மாலத்தீவுகள், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இருதரப்பு கடன் வழங்கும் மிகப்பெரிய நாடு சீனா என்று 2022 இல் உலக வங்கி அறிக்கை கூறியது.

மார்ச் மாதம் தேசிய மக்கள் காங்கிரஸ் அமர்வின் போது ஷி ஜின்பிங் அளித்த சமீபத்திய முதலீட்டு உறுதிமொழி, கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் கணிசமாக குறைந்துள்ளது.

சீனாவின் பொருளாதார மந்தநிலையை பார்க்கும்போது பெரிய அளவிலான வெளிமுதலீடு நிலையானது அல்ல என்பதை இது காட்டுகிறது.

ஆனால் மந்தநிலை இருந்தபோதிலும், சீனாவின் பொருளாதாரத்தின் மாபெரும் அளவானது, அதை உலக வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக ஆவதற்கு அனுமதிக்கும் என்று சாங் வலியுறுத்துகிறார்.

"அடுத்த ஐந்து ஆண்டுகளில் உலக வளர்ச்சியில் 20 வீதம் அல்லது அதற்கும் அதிகமாக சீனா பங்கு வகிக்கக் கூடும்."

**5. சீனா மீண்டும் அதிவேக வளர்ச்சி நோக்கி செல்ல முடியுமா?**

சீனா தனது பொருளாதார மாற்றத்தை உயர்தரம் கொண்ட வளர்ச்சியாக ஆக்கி, மதிப்பு கூட்டப்பட்ட ஏணியில் முன்னேறிச் செல்வதே அடுத்த கட்டம் என்று சாங் நம்புகிறார்.

"கொள்கை வகுப்பாளர்கள் இதை வலியுறுத்துவதையும், நீண்ட கால முன்னுரிமைகளில் தொடர்ந்து கவனம் செலுத்துவதையும் (தேசிய மக்கள் காங்கிரஸின்) இரண்டு அமர்வுகள் காட்டியது. இது சீனா அடுத்த கட்டத்திற்கு மாற முடியுமா என்பதை இறுதியில் தீர்மானிக்கும்."

இந்த பரிந்துரைகளை டியான்சென் சூ முன்வைக்கிறார்.

"நிலம் மற்றும் வீட்டு விலை வீழ்ச்சி நெருக்கடியை மிகவும் பொறுப்புடன் கையாள்வதே சீனாவுக்கு இப்போது மிகமுக்கிய பணியாகும்.

"இரண்டாவதாக, அது பொருளாதாரத்தின் சப்ளையின் பக்கம் கவனம் செலுத்துவதை விட, தேவையில் கவனம் செலுத்த வேண்டும்.

"சீனா பொருளாதாரத்தின் மேலும் பல பிரிவுகளை தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாராளமயமாக்க வேண்டும். ஒரு தசாப்தத்திற்கும் மேலான நிதி விரிவாக்கத்திற்குப் பிறகு, பொது நிதிகளின் நீண்ட கால நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் நிதி சீர்திருத்தத்தை தொடர வேண்டும்."

இதற்கிடையில், ஹேஊ இல் நிர்ணயிக்கப்பட்ட 5மூ மொத்த உள்நாட்டு வளர்ச்சி இலக்கை அடைவதில் சீனத் தலைமை கவனம் செலுத்தும் என்று சாங் நம்புகிறார்.

""ஓரளவு அதிக ஆதரவளிக்கும் நிதிக் கொள்கை இலக்குகளை நாம் பார்த்தாலும் 2024 வளர்ச்சி இலக்கை அடைவதற்கு, வரவிருக்கும் வாரங்கள் மற்றும் மாதங்களில் இன்னும் அதிக ஊக்கக் கொள்கைகளின் தேவை உள்ளது," என்றார் அவர்.





